# கர்ப்ப வாகடத் திரட்டு




தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

T. 22804

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 552

# கர்ப்ப வாகடத் திரட்டு

பதிப்பாசிரியர்

**மரு. ச. அரங்கராசன்,**

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்,

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

மற்றும்

**ஆய்வு மையம்,**

தஞ்சாவூர்.

2013] [விலை: ரூ. 100-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | கர்ப்ப வாகடத் திரட்டு |
| பதிப்பாசிரியர் | : | மரு. ச. அரங்கராசன்<br>சிறப்புக்கேண்மை<br>பதிப்பாசிரியர், |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 552 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2013 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 124 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு<br>மற்றும் ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | லேமினேசன் அட்டை |
| பொருள் | : | மருத்துவம் |
| விலை | : | ரூ. 100-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழி களஞ்சியமாய்த் திகழும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் 7,700க்கும் மேற்பட்ட தலைப்புகளில் தமிழ் ஓலைச்சுவடிகள் உள்ளன. இச்சுவடிகளிலிருந்து மிகச்சிறந்த இலக்கண, இலக்கிய, மருத்துவ, சோதிட, கணித, கதை நூல்கள் பதிப்பிக்கப்பெற்று பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வெளியிடப்பெற்று வருகின்றது. மருத்துவம் சார்ந்த சுவடிகளிலிருந்து சித்த மருத்துவ அறிஞர்களை சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு நல்ல பல செய்திகளை மக்களிடையே கொண்டு சேர்க்கும் பெரும் பணியினை இந்நூலகம் தொடர்ந்து செய்து வருகின்றது.

திருமூலர் கர்ப்ப வாகடம், பிரசவ வைத்தியம், இன்பரச மாலை போன்ற சுவடிகளில் காணப்பெறும் செய்திகளை விரிவாகக் கூறும் இந்நூல் பிறப்பை நான்கு பெரும் பிரிவுகளாகக் கூறுகின்றது. 1. முட்டை யிலிருந்து தோன்றுதல், 2. விதையிலிருந்து தோன்றுதல், 3. பையிலிருந்து தோன்றுதல், 4. வியர்வையிலிருந்து தோன்றுதல். பறவைகள், ஆமை, முதலை என்பன முட்டையிலிருந்தும், தாவரங்கள் விதையிலிருந்தும், வியர்வை வழி பேன் என்பனவும், கருப்பையின் மூலமாக மனிதர்கள், விலங்குகளும் தோன்றுகின்றன. ஆண்-பெண் சேர்க்கையானது. எல்லா உயிரினங்களிலும், இனப் பெருக்கத்திற்காகப் பெரும்பாலும் நடைபெறுகிறது. பண்டைத் தமிழரின் வாழ்க்கை அகம், புறம் என்று பிரிக்கப்பட்டது. இல்வாழ்க்கையை அகம் என்றும், ஏனையவை புறம் என்றும் கொள்வர்.

அவ்வகையில் இந்நூலக ஏட்டுச் சுவடியிலிருந்து 552வது வெளியீடாக வெளியிடப்படும் கர்ப்ப வாகடத் திரட்டு எனும் நூலினை மிகவும் சிறப்பாக நூலக சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் மருத்துவர். ச. அரங்கராசன் அவர்கள் பதிப்பித்துள்ளார். அவருக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூலினை வெளியிட நிதியுதவி நல்கிய நடுவண் அரசிற்கும், புதிய வெளியீடுகளை விரைந்து வெளியிடும் ஆர்வம் கொண்டு சிறப்புடன் பணியாற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) மற்றும் நூலக நிருவாக அலுவலர் ச. நடராஜன், B.Sc., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன் அவர்களுக்கும், நூலகத் தமிழ்ப் பண்டிதர் மணி. மாறன் அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர்களுக்கும், அச்சகப்பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் என் வாழ்த்துதலையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கா. பாஸ்கரன்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்

தஞ்சாவூர்,
16-09-2013.

# பதிப்பாய்வுரை

சரசுவதி மகால் நூலகத்தில் திருமூலரின் "கர்ப்பவாகடம்" சுவடி எண். 385, இன்பரசமாலை சுவடி எண். 204 ,(பி) பிரசவ வைத்தியம் சுவடி எண். 299 என்பன உள்ளன. "கர்ப்பவாகடம்" என்பதுடன் இன்பரசமாலை பல்வேறு நிலைகளில் ஒத்துள்ளது. சுவடி எண்.386 இப்பதிப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இச்சுவடியானது 15ஏடுகளை உடையது. 27+3 செ. மீ. அளவுள்ளது. பக்கத்திற்கு 8வரிகள்; 118 பாடல்கள், ஆசிரியர் திருமூலர் என்றுள்ளது. 112 பாடல்களைக் கொண்டது. இன்பரசமாலை என்பது இத்துடன் ஒத்த கருத்துள்ள சுவடியாகும். பக்கத்திற்கு 8 வரிகளாக 5 ஏடுகளைக் கொண்டது. 24 பாடல்கள் உள்ளன. அல்லா கிருபை செய்வான் வேணும், " அல்லா கிருபை செய்யவும் " என்றுள்ளது. பிரசவ வைத்தியம் என்பது எளிய மருத்துவ முறைகளை உள்ளடக்கியதாகும். பயன் கருதி, இதுவும் பதிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. "கர்ப்பவாகடச் சுவடி" வேறு சுவடிகளிலிருந்து எழுதப்பட்டிருக்கலாம். எனவே, எழுதிய ஆண்டு என்பன இதில் இல்லை. தொடர்ச்சியாக 112 பாடல்கள் உள்ளன. திருமந்திரத்தில் 455ஆவதாக உள்ளது. " திருமந்திரம் – வைத்தியப் பகுதி" என்ற நூலை மூலமும், உரையுமாக 1957இல் திருவாவடுதுறை ஆதீனம் பதிப்பித்து, வெளியிட்டுள்ளது. ஆயின் இதற்கான உரை தத்துவ நோக்கிலானதாம். "18 சித்தர் நாடி சாத்திரம்" என்னும் நூலில் திருமூலர் நாடி என்னும் தலைப்பில் இப்பாடல்கள் உள்ளன. சான்றாக கர்ப்பவாகடத்தின் 15ஆம் பாடல், நாடி சாத்திரத்தில் 2ஆவதாக உள்ளது. இது போன்றே யோக ஞான சாத்திர திரட்டு, 8ஆம் பாகத்தில் உள்ள திருமூலர் வியாதிக் கூறு 100 என்பது கர்ப்பவாகடத்துடன் ஒப்பிடப்பட்டு அவை, ஆய்வு செய்யப்பட்டன. எனவே, ஒருமித்த அமைப்பு முறையைப் பின்பற்றவில்லை. இதன் காரணமாகவே, யாழ்ப்பாணம் கந்தரோடை ச. கந்தையாப்பிள்ளை அவர்கள், 1931இல், உ. வே. சாமிநாத அய்யர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். "சித்தர் நூல்களெல்லாம்

வித்வத் பெரியார் கடாட்சம் பெறாது. பிறர், சிலரால் அச்சடிக்கப்பட்டு, பிழைகள் மலிந்து கிடக்கின்றன. தேடி அச்சிடப்படாதன மிகப்பல. மிகப் பதனமாகப் பேணப்பட்ட திருமந்திரமே, இடைச்செருகல் மலிந்தும், திரிபுகள் நிறைந்தும் கிடக்கின்றது என்றால், கேட்பாரற்றுக் கிடந்த சித்தர் நூல்களைப் பற்றி பேசவும் வேண்டுமோ?" 18ஆம் நூற்றாண்டில் உள்ள அச்சு நூல்களைப் பற்றிய திறனாய்வு இது எனலாம்.

எனவே அமைப்பு முறையானது நூலுக்கு நூல் மாறுபட்டதில் வியப்பொன்றுமில்லை. இந்நூலில் பாட வேறுபாடுகள், வடிவ வேறுபாடுகள் யாவும் குறிக்கப்பட்டுள்ளன. "தொடரின் பொருட் போக்கை மாற்றுவதாக அமைவது பாடவேறுபாடு ஆகும். ஆயின் கிளறவும் என்பது கிண்டவும் என்றும், நீர்விட்டு என்பது சலம்விட்டு என்பது போன்றவை வடிவ வேறுபாடுகள என்று பேரா. வே. இரா. மாதவன் குறிப்பிட்டுவார். கர்ப்பவாகடத்தின் முதல் பாடல் பாடவேறுபாட்டுடன் உள்ளது. திருமந்திரம் 3000இல் "பொழிந்த புனல் பூதம் போற்றும் கரணம் ஒழிந்த அப்பு, தேற்றும் குணமும் என்பது பொழிந்து புகுந்தது. புணர்கின்ற போதே"[1] என்று கர்ப்பவாகடத்தில் வருகின்றது. வடிவ வேறுபாட்டுக்கு பாடல் 4சிறந்த சான்றாகும். "ஆண்மிகில் ஆணாம் பெண்மிகில் பெண்ணாம்" என்பது "திருமந்திரம் 3000"இல் "ஆணாகும்", "பெண்ணாகும்" என வருகின்றது. இதில் எவ்விதமான பெரிய வேறுபாடுகளும் இல்லாமல், ஒரே பொருளையே உணர்த்துகின்றன. மகப்பேற்றைப் பற்றிக் கூறும்போது இடம்பெற்றுள்ள தத்துவக் கருத்துகள் தடுமாற்றத்தைத் தருகின்றன. சான்றாக பாடல் 15இல் வளமான பத்தில் வழங்கும் தசவாயு என்ற தொடரைக் கொள்ளலாம். வளமான பத்து தசவாயு என்பன எதைக் குறிப்பது? என்பது தடுமாறச் செய்யும். பாடல்களின் விடுபாடுகள், மிகைப்பாடல்கள் என்பன ஓரளவு கண்டறியப்பட்டுள்ளன. இந்நூல் முழுவதும், செய்யுள் நடையில் அந்தாதியாக உள்ளது. உரை விளக்கங்கள் ஏதும் சுவடிகளில் காணப்பெறவில்லை. எனவே புத்துரையின் தேவை எழுந்து, அறிவியல் அடிப்படையில் என்னால் எழுதப்பட்டது. கர்ப்பவாகடம், இன்பரசமாலையில் உள்ள நோய்களின் பட்டியல் இடம்பெற்றுள்ளது. இவை படிக்கின்றவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இந்நூலை நுண்ணாய்வு செய்த பேரா. முனைவர் வே. இரா. மாதவன்,எம்.ஏ., முன்னாள் தலைவர், ஓலைச் சுவடித்துறை , தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் அவர்களுக்கும், அமரர் மரு. முனைவர் எஸ். பிரேமா, எம்.டி., (சி) பிஎச்.டி., முன்னாள் தலைவர், சித்த மருத்துவத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் அவர்களுக்கும், மரு. தேவநாதன்,எம்.டி.,(ஆயுர்) உதவி பேராசிரியர், சாஸ்திரா பல்கலைக் கழகம், தஞ்சாவூர் அவர்களுக்கும், படியெடுத்துதவிய திருமதி. அபர்ணா,எம்.எஸ்ஸி., அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலினை வெளியிட பெருந்தன்மையுடன் அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **கா. பாஸ்கரன், இ. ஆ. ப.,** அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியினை உரித்தாக்குகிறேன். இப்பணிகளுக்கு ஊக்கமளித்து, தேவையான உதவிகளை செய்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) மற்றும் நூலக நிருவாக அலுவலர் **ச. நடராஜன்,** B. Sc., அவர்களுக்கும், இந்நூல் முழு வடிவம் பெற அனைத்து வகையிலும் உதவி செய்த நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M.A.,B.Lit.,M.L.I.S.,Ph.D. அவர்களுக்கும், நூலகத் தமிழ்ப் பண்டிதர் **மணி. மாறன்** அவர்களுக்கும் என்னுடைய நன்றிகள். நூல் அச்சு வடிவம் பெற்று வெளிவர நிதி நல்கும் நடுவணரசிற்கும் நன்றி ! இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்த சரசுவதி மகால் நூலகக் கணினிப் பிரிவில் பணிபுரியும் அச்சகத்தாருக்கும் என் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

**ச. அரங்கராசன்,**
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்.

---

*1. அகத்தியர் வைத்திய காவியம் 1500-பேரா. வே.. இரா. மாதவன், பக்கம் 15, தமிழ்ப் பல்கலைக் கழகதம்*

# நூல் ஆய்வு

"திருமூலர் கர்ப்பவாகடம்" என்ற இந்நூல் மிகவும் சிறப்பானதாகும். திருமூலர் எழுதிய திருமநதிரம் 3000 பாடல்களைக் கொண்டது. காலத்தால் கி. பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. 10ஆம் திருமுஜறயாகப் போற்றப்பட்டு வருகின்றது. எளிமையான பாடல்களில் பல, பொருள் காண இயலாத குழுஉக் குறிகளை உடையதாகும். "திருமூலர்" என்ற பெயரில் பலர் இருந்துள்ளார்கள். எனினும் திருமந்திரத்தின் ஆசிரியர் திருமூலரே. காலத்தால் முந்தியவர் ஆவார். "நம்நாட்டு சித்தர்கள்" என்ற நூலின் ஆசிரியர் பேரா. மாணிக்கவாசகம் அவர்கள் "பிறந்த நட்சத்திரங்களின் பெயரைச் சூட்டிக்கொள்ளும் மரபு இன்றும் இருந்து வருகிறது" என்பார். மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு "மூலன்" என்ற பெயர் வைக்கப்பட்டது.

திருமூலர் 3000 ஆண்டுகள் வாழ்ந்தவர் என்பதற்கு நேரான சான்றுகள் எதுவும் இல்லை. சேக்கிழார். திருமூலரின் வாழ்நாள் 3000 ஆண்டுகள் எனக் காட்டியுள்ளார். இவர், திருமூலரின் வரலாற்றை 28 விருத்தங்களில் முடித்துள்ளார். எனவே சேக்கிழார் காலத்தே, திருமூலர் 3000 ஆண்டுகள் வாழ்ந்தவர் என்ற கருத்து நிலவியது.

திருமூலர் என்ற பெயரில் பலர் சித்த மருத்துவத்தில் இருந்தனர். திருமூலரின் இன்னொரு பெயர் நந்தி. நந்திகள் நான்குபேர் சிவயோக முனிவர். பதஞ்சலி, புலிக்கால் முனிவர், திருமூலர், மாலரங்கனின் மாணவர் மூலரின் முதல் மாணவர் போகர் என்று கொங்கணர் வாதகாவியம் 3000இல் வருகின்றது. திருமூலரின் மாணவர்கள் 8 பேர்கள், திருமூலர் 5 வகையான குளிகைகளையும் கௌரிசத்துச் செந்தூரத்தையும் உண்டதாகவும் கூறுகின்றது. மேலும் சோழ மன்னனுக்காக நடராசரின் பொன் வடிவ சிலையை வடிக்க திருமூலர் உதவியதாக கொங்கணர் வாதகாவியம் 3000, போகர் 7000, போகர் சரக்கு வைப்பு 800 ஆகிய நூல்களில் வருகின்றது.

திருமூலரின் ஆசிரியர் நந்தி தேவர் என "கர்ப்ப வாகடத்தில்" வருகின்றது.

"உற்ற வியாதி உறுதியாம் என் நந்தி" (பாடல் -14)
"துறையான எல்லாம், சொன்னாரே என் நந்தி" (பாடல்-94)

"என்நந்தி வன்மையாம் நோய் குன்மம்" (பாடல்-94)

"நந்தி உரைத்தது நலமான கர்ப்பத்தில்" (பாடல்-102)

நந்தி தேவரின் பெயரில் நிகண்டு, கலைஞானம் என்பன உள்ளன. நந்தி என்ற பெயரில் பலர் இருந்துள்ளார்கள். நந்தி "கைலாச சித்தன்" எனவும், அவரது மாணவர் மூலர் என்றும் நந்திக் கலைஞானம் கூறுகின்றது. காகபுசண்டரின் மாணவர் நந்தி என்று நந்தீசர் நிகண்டில் வருகின்றது.

போகர் சனனசாகரம் என்ற நூலில் உள்ள 91ஆம் பாடல், எட்டு வகையான நந்திகளைக் குறிப்பிடுகின்றது. 1. அகத்தியர், 2. புலத்தியர், 3.காசிபர், 4. மார்க்கண்டர், 5.அட்டாங்கி, 6. கௌதமன், 7.கலைக்கோட்டு முனிவர், 8. சதானந்தர் இவர்கள் கைலாச வர்க்கம் எனப்படுவோர் ஆவர். "அகத்தியர் பூரண காவியம் 1000" என்ற நூலில், பாடல் 74-75இல் இரத்தினகிரி மலையைப் பற்றி வருகின்றது. இம்மலை நந்தி-குருமுனி வாழ்விடம் எனவும், இவர் மூலவர்க்கத்தார் என்றும் கவுசக் குளிகையைத் தருவதாகவும் கூறுகின்றது. கொங்கணர் வாதகாவியம் 3000இல் இடபரிசி வரலாறு உள்ளது. நந்தி மூல மரபினர் அகத்தியர் கூடத்தின் மேற்கு அடிவாரத்தில் வசித்து வந்தார். இவரது ஆசிரமம் இருந்த இடமே, இன்று திருநந்திக்கரை என்னும் இடம் ஓடும் சிற்றாறு. நந்தியாறு ஆகும் என்று மரு. பி. வி. கேசவப்பிள்ளைக் கூறுகின்றார். திருமூலர் குறித்தும் நந்திதேவர் குறித்தும் புனை கதைகள் மிகுதியாக உள்ளன. மத அடிப்படையிலும் திருமூலர் கூறப்பட்டுள்ளார். மருத்துவர் அயோத்திதாச பண்டிதர், ஔவையார், திருமூலர், பட்டினத்தார், தாயுமானவர் ஆகிய சித்த மரபினர், பௌத்தர்கள் என்பார்.

**சதுரகிரி புராணம் கூறும் வரலாறு :**

வீரசேனன் என்ற அரசன் இறந்து போகின்றான். அவன் மனைவி குணவதி அழுகின்றாள். இறந்த உடலில் திருமூலர் புகுந்து கொள்ளுகின்றார். தன் உடலை மாணவன் குருராசனிடம் காக்கும்படி ஒப்படைக்கின்றார். பாம்பு, நஞ்சைப் பூவில் கக்கியது. அதை நுகர்ந்ததால் இறக்க நேர்ந்ததாகவும், மன்னன் மனைவியிடம் கூறினான். நடத்தையில் ஐயமுற்ற மனைவி நடந்தவற்றை அறிந்து, பழைய உடலை ஆட்களால்

அறிக்கின்றாள். யாரும் காணாமல், வீரசேனனின் உடலிலிருந்த திருமூலர் சதுரகிரியை அடைகின்றார். வீரசேன மன்னன் உடலை "யானை உண்டி" மரத்தில் மறைத்து, சம்புகேசுரன் என்பன் உடலில் புகுந்து, சதுரகிரி குகையில் வாழ்ந்தார். கண்ணபெருமானுக்கும் அருளுரை வழங்கினார் என்று அகத்தியர்-12000இல் வருகின்றது. மேலும் மார்க்கண்டமுனிவர், திருமூலரை சந்தித்ததாகவும் உள்ளது. எனவே திருமூலர் பற்றிய பல புனை கதைகள் உள்ளன என அறியலாம். திருவாவடுதுறை புராணம் சாத்திரம் சாமினாத முனிவர் இயற்றியது. இதற்கு "துறையிசை புராணம்" என்ற பெயரும் உண்டு. இந்நூலின் "தடுத்தாட்கொண்ட சுருக்கத்தில்" திருமூலர் வரலாறு காணப்படுகிறது. திருவாவடுதுறையில் திருமூலர், அகத்தியர் போகர் ஆகிய சித்தர்களைச் சந்திக்கின்றார். திருமாளிகைத் தேவரும், கருவூர் சித்தரும், போகரின் மாணவர்கள் ஆவர். இப்புராணத்தின்படி, திருமூலர், அகத்தியர், போகரின் சமகாலத்தவர் எனலாம். இது புராண மரபேயன்றி, வேறு ஆய்வுக்கு இடமில்லை. "திருமூலர் கருக்கடை 600"இல் காயகற்ப மூலிகைகள் 108ஆகும். "திருமூலர் கருக்கடை 600"இல் காயகற்ப மூலிகைகள் 118ஆகும். இம் முரண்பாடுகளால், திருமூலர் பலர் இருப்பது உறுதியாகும்.

திருமூலர் மடங்களை நிறுவினார். உடன் காலிங்கர், அகோரர், திருமாளிகைத் தேவர், நாதாந்தர், பிரமானந்தர், போகதேவர் ஆகியோரும் மடங்களை அமைத்தவர்கள்.

திருமூலரைப் பின்பற்றுவோரின் தோற்றம் பற்றி 18 சித்தர் பெரியஞானக்கோவையில் வருகின்றது. திருமூல வர்க்கத்தார், சபைப் பிரம்பு 5 பட்டை உப்பு கதை, படிகமணி, யோகவேட்டி, படிக இலிங்கம், காதுகளில் செம்புருட்டு, புத்தகம், அக்கமணி, பாதக்குறடு, புலித்தோல் ஆகியவற்றுடன் இருத்தல் வேண்டும் என்று கூறுப்பட்டுள்ளது.

அறிவியல் அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கருவில் ஏற்படும் பல்வேறு வகையான மாறுபாடுகள் கூறப்படுகின்றன.

---

*1. சித்தர் காப்பியம் - மரு. பி. வி. கேசவபிள்ளை, பக்கம். 24-25, சுநதரவிலாச அச்சகம், 1982.*

*2. 18 சித்தர்கள் வரலாறு - சி. எஸ். முருகேசன், பக்கம். 56, கிருஷ்ணா பிரஸ், சென்னை, 2003*

தமிழில் மருத்துவம் என்னும் சொல்லுக்கு இணையாக வைத்தியம், வாகடம் போன்ற சொற்களை வழங்கும் மரபை பல பழைய நூல்களில் காணலாம். இதை ஒட்டியே இந்நூல் கர்ப்ப வாகடம் எனப்பட்டது. பாடல்களின் எண்ணிக்கையைக் கொண்டும் திருமூலர் திருமந்திரம் வைத்தியப் பகுதி எனவும் அழைக்கப்பட்டது.

**சித்த மருத்துவத்தின் சிறப்பு :**

தொன்மையான திராவிட நாகரிகத்தை அடிப்படையாக உடையது. எண்வகைத் தேர்வு-நாடி மூலம் நோயறிதல், பஞ்சபூதங்களையும் உள்ளடக்கிய மருந்துகள், உடல் நோயின்றி வாழத் தேவையான காய கற்ப முறைகள், சரப்பயிற்சி என்பன முதன்மை பெறும். உணவே மருந்து. மருந்தே உணவு என்பது கொள்கை, திருமூலரின் திருமந்திரத்தைப் பின்பற்றி பல்வேறு வகையான குழூஉக் குறிகளை பாடல்களில் கையாண்டதும், சித்தர்களின் தனிச் சிறப்பேயன்றி வேறில்லை. குழூஉக் குறிகளை அமைத்து, அதற்காக தனி நிகண்டுகள், அகராதிகள், திறவுகோல்கள் போன்றவைகளையும் ஏற்படுத்தினார்கள். நூல்கள் யாவும் வாதம் வைத்தியம் யோகம் ஞானம் என்னும் பெரும் பிரிவுகளில் உள்ளன. இந்நூலில் வாத, பித்த, கபம் ஆகியவைகள் நாடிகள், சரம் பற்றிய செய்திகள், எண்வகைத் தேர்வு, மரணக் குறிகள் என்பன கூறப்பட்டுள்ளன. வாதநோய், சூலை, சன்னி என்ற முக்குற்ற நோய், சுரம், செரியாமை, குன்மம், கழிச்சல், கிராணி, மேகம், கிரந்தி, விரணம், வாயு, மூலம், பெரும்பாடு, கண்நோய், தோல்நோய் நோய்கள் கூறப்பட்டுள்ளன. மகப்பேறு, ஆண்மலடு, பெண்மலடு, பற்றியும் வருகின்றது. இரசம், அப்பிரக செந்தூரம், சீந்தில் சர்க்கரை, திராவகம், கந்தகம், நாகம், தங்கம், செம்பு, தாளகம் போன்றவைகளால் செய்யப்பட்ட மருந்துகளால் தீரும். பூரண சந்திரோதயம் என்ற மருந்து பற்றியும், அப்பிரக செந்தூரத்தை சீந்தில் சர்க்கரையில் வைத்துண்பது பற்றியும் குறிப்பிடுகின்றார். இம்மருந்துகள் இன்றும் பயன்பாட்டில் உள்ளன. சித்த மருந்துகள் 64 வகைப்படும். அகமருந்து 32, புற மருந்து 32 ஆகும். இதில் இடம்பெற்ற செந்தூரம், திராவகம் பற்றிய விளக்கம் உலோகம் அல்லது பாடாணங்களை

இலைச்சாறு, புகைநீர், செயநீர் இவைகளால் அரைத்துப் புடமிட்டும், எரித்தெடுத்தும், அரைத்தும், வறுத்தும் செய்யப்படுவது. வாலையில் நீர்விட்டு, அதில் சரக்குகளை இடவேண்டும். அடுப்பை எரித்து, வடிகட்டி எடுப்பது குடிநீர், உப்பு வகைகளை வாலையிலிட்டு வடித்தெடுப்பது "திராவகம்" ஆகும். இது அகமருந்து 32இல் இடம்பெறவில்லை, அப்பிரகம் செந்தூரத்திற்குத் துணை மருந்தாகத் திருமூலர் கூறுகின்றார். இவ்வாறு திருமூலரின் கர்ப்ப வாகடம் என்ற இந்நூல் மிக்க சிறப்புடையதாகும். வழக்கம் போல் சித்த மருத்துவர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் நூலை விரும்பி வாங்குவார்கள் என நம்புகிறேன்.

**ச. அரங்கராசன்,**
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்.

தஞ்சாவூர்,
31-08-2013.

---

*1. அகத்தியர் வைத்திய காவியம் 1500-பேரா.வே.இரா.மாதவன், பக்கம். 15, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1994.*

# கர்ப்பவாகடத் திரட்டு

## இன்பரசமாலை

### காப்புச் செய்யுள்

ஆதியே அருளிச் செய்தான்
அகம்மது தன்னறிவு
நீதியாம், நிரம்பி நின்ற
நின்மலர் வடிவ தாகும்
மோதியே, அறிந்தோர்க் கெல்லா
முகந்திடும் என்று சொன்ன
தாயே, உயிர்கட் கெல்லாம்
கர்த்தனே காப்ப தாக. *(1)*

நன்பாமாகி நிற்கும்
நாயநல் மொழியைக் கேட்டு
நின்பாச மாக ஓதும்
நீதியாம், வேதத் தோர்கள்
அன்பாச மாகப் பூண்டு
அகம்ம தருளைக் கொண்டு
இன்பாச மாகி ஆகி,
இன்பத்திதை இயம்புகிறேன். *(2)*

**உரை:** முதலிரண்டு பாடல்களும் இறைவழிபாட்டுடன் தொங்குகின்றன.

தன்னுடைய தாரமான தையலைப் புணரும்போது
உன்னுடைய வலது பாகம், ஓடியே வாயுவினூட
அன்னது, கர்ப்பமானால், ஆணும் சொருபமாகும்
முன்னுள்ள அறிஞர், சொன்ன மூதுரை அறிந்து
கொள்ளே. *(2)*

**உரை:** தன்னுடைய மனைவியுடன் இன்பத்தை பெறும் நிலையில், வலது புறத்தில் காற்று ஓட, பிறப்பது ஆண் குழந்யைாகும். இதை மருத்துவ வல்லோர்கள் கூறினார்கள். பொது மகளிர், வரைவின் மகளிர் போன்றவர்களுடன் பெறும் இன்பத்தைக் கூறாது, உரிமைக்கிழத்தியான மனைவியைக் குறிப்பிட்டார். நாடி நூலின் கருத்தை இங்கு கூறுகின்றார். “அறத்தான் வருவதே இன்பம்” என்பார் வள்ளுவர்.

*இடப்புறத்தில் இயங்குபோது*
*இருவரும் சேர்வராகில்*
*நடப்பது பெண்ண தாகும்*
*நல்லதோர் வடிவதாகும்*
*கடப்புற, முடிவுஇல்லான்*
*கர்த்தனும் அருளிச்செய்வான்*
*மடப்புறம் வேண்டிநீங்கள்*
*மன்னிடும் இதனைஎன்றார்.* **(4)**

**உரை:** காற்று இடதுபுறம் செல்லும்போது கருவுணடானால், அது பெண்ணாகும். அப்பெண், அழகான உருவத்தைப் பெற்றிருப்பாள்.

*கலந்திரு பேறுமாகில்*
*களித்திடும் வேளையத்தில்*
*மலர்ந்திடும் மங்கைதானும்*
*மலத்தையே அடக்கிக்கொண்டு*
*சலமது கூடும்போது*
*சனித்திடும் பிள்ளை*
*நலமதில் குருடதாகி*
*நாட்டினில் வருவதாமே.* **(5)**

**உரை:** சேர்க்கையினால் மகப்பேறு உணடாகும். இருவரும் கூடும்போது பெண்கள் மலத்தைக் கட்டுப்படுத்தவும், நீரை வெளியேற்றாமல் நிறுத்தி வைத்தாலும், பிறவியிலே குழந்தைக்கு பார்வை இழப்பு ஏற்படும் என்பதை அறியவும.

அலிதனை வருகவென்றே
அகம்மது அருளிச்செய்தார்
சலியுறு போதாய்வந்த
சந்தி எழுந்தநாளில்
மலியுறு மங்கைதன்னை
மருவிய கர்ப்பமாகில்
ஒலியுறு குழவிதானும்
உதித்திட பேயதாமே. *(6)*

**உரை:** நிலவு தோறும் இரவி நேரத்தில் இரவும், பகலும் அல்லாத வேளையில் பெண்ணைக் கூட, ஏற்படும் மகப்பேறு தீங்காகும். அறிவு வளர்ச்சியற்ற குழந்தை உண்டாகும். சிறிது நேரமே, இரவும், பகலுமில்லா நிலை இருப்பதால் "சலியுறு" என்று கூறினார். இரணியன் அழிந்தது. மாலைக் காலத்தில் என்பது புராண வழக்கு. இக்காரணம் பற்றியே கலவியைக் கூடாது என்றார்கள். அந்தி சந்திப்பொழுதில் காசிபன் மாயையுடன் சேர, அரக்கர்கள் தோன்றினார்கள். புலர்காலை, சூரியன் மறையும் மாலை என்பன விலக்கப் பட்டவைகளாகும்.

பிறைகண்ட மூன்றாம்நாளில்
பிரிந்திடா மங்கை தன்னை
முறைகொண்டு வந்தார்தம்மை
முயன்றிடும் அந்தநாளில்
உறைகின்ற கர்ப்பம்விட்டு
உற்பத்தியாகும் பிள்ளை
நிறைகின்ற வயதைவிட்டு
நலியாது, அறிந்துகொள்ளே. *(7)*

**உரை:** அமாவாசையிலிருந்து மூன்றாம் நாளில் ஏற்படும் சேர்க்கை ஏற்படும் கருவுக்கு, முழுமையாக சொல்லப்படும் நூறு ஆண்டுகள் உள்ள வாழ்வு உண்டு என அறியவும்.

பூரணநிலவாய்
பொழிந்திடும் அந்தநாளில்
காரணமாக வந்தக்
கன்னியைப் புணரும்போது

*வாரண வெள்ளைகொண்டு*
*வந்திடும் குழவிதானும்*
*ஆரணவேதம் சொன்ன*
*அறிந்துகொள் இதனை என்றார். (8)*

**உரை:** *முதுநிலவு போன்று ஒளி வீசும் காலத்தில், கன்னிப் பெண்ணுடன் சேர கரு உண்டாகும். இது வெள்ளைப் பிள்ளையாரைப் போலிருக்கும். தமிழ் மருத்துவமறைகளான நூல்கள் கூறும். இதை அறியவும். மறை பொருள்கள் சித்த மருத்துவ நூல்களில் உள்ளன. அல்லது தக்கவர்களிடம் பாடம் கேட்க வேண்டும். எனவே, "ஆரண வேதம்" என்றார்.*

*பாட்டிமையான நூலில்*
*பாவையாள் தனைக்கூடி*
*நாட்டியே கர்ப்பத்துக்குள்ளே*
*நலம் பிறவந்தபிள்ளை*
*கூட்டிய, அறையை விட்டுப்*
*குதித்திடும் அந்தநாளில்*
*வாட்டிய முசலகண்டன்*
*வந்திடும் உண்மைதானே. (9)*

**உரை:** *அமாவாசையை அடுத்தநாள் பாட்டிமை எனப்படும். இந்நாளில் பெண்ணுடன் சேர்ந்து ஏற்படும் குழந்தைக்கு "முயலகண்டன்" என்ற வலிப்புநோய் வரும் என்பது நடை முறையாகும். எனவே இந்நாளில் பெண் சேர்க்கையைத் தவிர்க்க வேண்டும். இங்கு கூறப்படும் அமாவாசையை முழு உவா என்பன பெண்களுக்கு உடலில் உண்டாகும் "அமுதநிலை"ப்பற்றியதாகும். மாதந்தோறும் வரும் அமாவாசை, பௌர்ணமி என்று கொள்ளுதல் தவறு. இவற்றை வல்லார் வாய் அறியவும்.*

*வெள்ளியில் பகல் நாள்தனில்*
*விரைந்திடு மூன்றாம் சாமம்*
*ஒள்ளிய மங்கைதனை*
*உகந்துடன் புணரும்போது*

தெள்ளிய கர்ப்பத்துள்ளே
தெளிந்திடும், குழவிதானும்
வள்ளிய கண்ணுமாறாய்
வந்திடும் உண்மைதானே. (10)

**உரை:** சுக்கிரன் என்ற நட்சத்திரம் தோன்றிய முகூர்த்தத்தில் மூன்றாம் சாமத்தில் தலைவன் வேகமாய்ச் செல்வான். அழகான பெண்ணுடன் விருப்பத்துடன் சேருவான். அப்போது கரு உண்டானால், அது மாறுகண்ணுடன் பிறக்கும் என்பது உண்மையாகும்.

இருவரும் கூடும்போது
இருவரும் வளிம்பதெல்லாம்
ஒருவர் தன்துயிலில் தாங்கி
ஒண்டியே நடந்தபோது
அருவருந் தவைனக் கண்டால்
அணுகிடா வண்ணமாகி
உருஒருத்திவரகள் தானும்
முடுகுதல் நீங்குவாரே. (11)

**உரை:** ஒரே படுக்கையில், இரண்டு பேரும் சேரும் பொழுது. ஏற்படும் குற்றம். ஒழுக்கமாக, சார்ந்த இருப்பார்கள். மிக்க தவத்தை உடைய முனிவனை அச்சமுடன் கண்டு ஒற்றுமையாக விரைந்து செல்லுவார்கள்.

அன்னவர் விலகுமென்ற
அழகிய மொழியதாகும்
நின்னவர், புணரும்போது
யோனில் தங்குமாகில்
விண்ணவர் தாங்கிக் கொள்ள
விரைந்திடும் குழவிதானும்
அன்னவர் வெறுக்கும்போது
அறிவுகள், ஓடும்தானே. (12)

**உரை:** அவ்வாறு கணவன் மனைவியும், விரைவாக செல்லுவது. அழகான ஓர் சொல்லுக்கு ஒப்பானது. அவர்கள் சேரும்போது விதியால் கரு உண்டானால். அதை வானுலகில் உள்ளவர்கள் போற்றுவார்கள். இக்குழந்தையை அவர்கள் ஏற்காத நிலை, உறுதியாக மிகுதியாகும். கணவன், மனைவி விரும்பாத நிலையில், உணர்வு குலையும்.

கர்ப்பத்தில் நின்றகாற்று
கிழிந்திடும் வித்தினூட
தப்பற ஒதுங்குமாகில்
தரித்திடும் குழவிஇரண்டாம்
ஒப்புற வலமடக்கில்
உதித்திடும் செவிடது ஆகும்
அப்புறச் சலமடக்கம்
பிள்ளையும் ஊமையாகும். *(13)*

**உரை:** இரட்டைக் குழந்தைகள் ஏற்படக் காரணம் கூறுகின்றார். சேர்க்கையின்போது ஆணின் விந்துவில் காற்று நடுவில் சென்றால் அது பிளவுபடும். இரண்டாக பிரிந்துள்ள சூல்களுடன் கருப்பையில் செல்ல இரட்டைக்கரு உண்டாகும். இரட்டைக் குழந்தையை "கவை மகன்" என்று சங்க இலக்கியம் கூறும். தாய் மலத்தை வெளியேற்றாமல் சேர்ந்தால் செவிப் புலனில்லாமல் குழந்தை பிறக்கும். சிறுநீரை வெளியேற்றாமல் சேரப் பேச்சுத் திறனில்லாமல் குழந்தை உண்டாகும். இதில் செவிட்டு ஊமைக்கான காரணங்கள் கூறுப்படுகின்றன. இதுபோன்ற திருமந்திரத்தில் உள்ளன.

குழை,இரு, கண்ணினாளே
கூடியே, போதில் அங்கை
அளையவே, பேசிக்கொண்டு
அவர்களும் முயல்வாராகில்
விளையவே, கர்ப்பம்விட்டு
விளித்திடும் குழவிதானும்
முனையவே, செவிடதாகி
உற்பத்தியாகும் என்றார். *(14)*

**உரை:** குழைகளை அணிந்த பெண்ணே, உள்ளங்கைகளை உடலுடன் பிணைத்துத் தழுவி கணவன் மனைவி, ஒன்றாகப் பேசிக்கொண்டு சேர்ந்தால், பிறக்கும் குழந்தை காது கேட்காமல் பிறக்கும் என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

ஆங்கவர் அருளிச்செய்த
அழகிய வேதத்துள்ளே
வாங்கது சொல்லும்போது
வடிவுள்ள மங்கை தன்னை
நீங்கிடாதவனும் புல்கி
நின்றிடும் குழவிதானும்
பாங்குடன், நீதிகேட்டம்
பயனில்லாதவர்கள் கண்டாய். (15)

**உரை:** முன்னோர்கள் இயற்றிய மருத்துவ நூல்களில் கூறப்பட்டது. அழகிய பெண்ணை, இடைவிடாமல் தழுவிச் சேர, மகப்பேறு உண்டாகும். நன்மை அடையாத உடலை உடையவர்கள் பார்த்து, அறிவுரை சொல்லுவதைக் கேட்க பயன் இராது என்பதைக் காணவும்.

நேமத்தோர் ஒன்றாய்கூடி
நிரைநிரையாக நின்று
சாமத்துள் சொல்லும்போது
கன்னியைப் புணர்வராகில்
சேமத்தக் கர்ப்பந் தன்னில்
சேர்ந்திடும் குழவிதானும்
போமொத்த சொல்லைவிட்டு
புவிதனில் வருவதாமே. (16)

**உரை:** மணச்சடங்குகளை முறையாக அணிஅணியாக செய்வார்கள். நல்லோர்கள் வகுத்துள்ள நேரத்தில், கன்னித் தன்மையுள்ளவருடன் சேரவேண்டும். நல்வாழ்வின் பயனாக, மகப்பேறு உண்டாகும். இது கருப்பையிலிருந்து வெளியேறி, நிலத்தை அடையும். "சாமத்துள் செல்லும்போது" என்பதே பொருத்தமாகும். உணவு உண்டு 3 மணி நேரம் ஆனவுடன் பெண்ணுடன் சேருதலே நன்மையாகும்.

தாரமாகி நின்ற தோகையை நாலாநாளில்
ஆரவே, கூடும்போது, அவளிடச் சிவப்புத்தோன்றில்
ஓரவே, அறிவுவேண்டி, உலகினில் வந்தபோது
பாரமாய் உடலைத்தாங்கும் பகர்ந்திடுவ்
வோவியாமே.*(17)*

**உரை:** மனைவியான கன்னியை, பூப்பு நின்ற நான்காம் நாளில் சேர பிறப்பு உறுப்பில் இரத்தத்துளிகள் உண்டாகும். நிறைவாக வாழ இவ்வுலகத்திற்கு பிறவியை எடுத்துள்ளோம் என அறிவால் உணர்ந்து கொள்ளவேண்டும். கலவியில் உடலைப் பொறுத்துக் கொள்ளுதல், அழகான மனைவியாகும்.

பொழுதுவன் உதிக்கும்போது
பொருந்திய மங்கை தன்னை
முழுவதும் அவர்கள்கூடித்தானும்
முயன்றிடும் பிள்ளைதானும்
அழுதிடும் அவரைக் கண்டு
அகண்டமாய் அறிவுமண்டி
பழுதுடன் கூன்கள்செய்யும்
பாவிகளாவர் கண்டாய். *(18)*

**உரை:** சூரியன் தோன்றும் விடியல்காலம், பெண்ணுடன் சேர்ந்து, இன்பம் துய்ப்பார்கள். உதயத்தில் சேரும்போது, மகப்பேறு குறையுள்ளதாக, வளைவுடன் பிறக்கும். தந்தை தீமையாளன் என்று முழுமை உணர்வுடன் பார்த்து அழும். பகல் பொழுது சேர்க்கையை விலக்கவேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன. "பகலில் புணரோம்" என்பது தேரையரின் கருத்து.

அல்குலை நோக்கிக்கொண்டு
அருகினில் மடந்தைதன்னை
புல்கிய வேளை தன்னில்
பொருந்திடும் குழவிதானும்

மெல்லிய கர்ப்பம் விட்டு
மேதினில் மீது வந்தால்
நல்கிய முகத்தில், கண்ணில்
நாடிடாத் தெளிவுகண்டாய். (19)

**உரை:** *19* ஆண்டுகள் உள்ள பெண்ணின் பிறப்பு உறுப்பைப் பார்த்து தழுவித் தக்கபடி சேர்ந்த கணவனால்; பெண்ணுக்குக் கரு ஏற்பட்டுக் கருப்பையில் பொருந்தும். *10* மாதங்களுக்குப் பின், உலகத்தில் பிறக்கும். ஆய்ந்து காணும்போது முகம், கண்களில் இரத்தக்குழாய்களில் வளர்ச்சியைப் பார்க்கலாம்.

பொறுத்ததோர் அறிஞ ரெல்லாம்
போதக மாகக் கொள்ளும்
மறுத்ததோர், வசன மென்ற
முகம்மது அருளிச் செய்தார்
சிறுத்ததோர், பெருநாள் தன்னில்
செல்வியைச் சேர்வ ராகில்
கறுத்ததோர் பிள்ளைக்காலும்
கைவிரல் நூலாறாமே. (20)

**உரை:** முகம்மது நபி அருளிச்செய்த அறிவுரைகளை தவறு என்று கூறிய அறிவுடையோர் நாள்கள் பல கடந்து, ஏற்றார்கள். கொண்டாடப்படும் அசுபதி போன்ற நட்சத்திரம் வரும்போது கற்புள்ள பெண்ணைக் கூடுவதால் ஏற்படும வம்சத்தில் குழந்தை கறுப்பாகவும், ஆறுவிரல்கள் தொங்கியபடி இருக்கும். இது இயல்புக்கு மாறானதாகும்.

தாரத்தை நாடிச் செல்லத்
துணிந்திடும் அந்த நாளில்
காரொத்தக் குழலி யான
கன்னியைப் புணரு வாராகில்
பாரொத்து வாழு கின்ற
பழம்பொருள் அதுவுமாறும்
மானொத்தத் தவறுக்கென்ன
அகுதியு மாவார், கண்டீர். (21)

**உரை:** பெண்ணை விரும்பித் தடைகளை மீறி களவொழுக்கத்தில் இருக்கும் நிலை, தலைவன், பெண்ணைச் சேர்வது உலகத்துடன் ஒட்டிய, தொன்மையான உண்மையான வரவாகும். பெண்ணின் குற்றத்தால், தாழ்ந்தவர் ஆவார் எனப் பார்க்கவும்.

அத்துலை அறிந்து மீண்ட
அண்டிரா, மங்கைதன்னை
ஒத்துடன், புணர்வாராகில்
உதித்திடும் குழவிதானும்
பத்துடன் அறிவு என்று
பகர்ந்திடும் நீதி மாறி
இத்துடன் கூட தாகி
இருப்பதே, உலகில் ஒன்றார். (22)

**உரை:** அவ்வாறு ஒத்துத் தெரிந்துள்ள, உயர்ச்சியாக மணம் செய்து கொடுக்க தன்மையுள்ள பெண்ணை இரவில் கண்டு, ஒப்புதலுடன் சேருவான் தலைவன். அறிவுடன், அன்பு கொள்வான் என்று சொல்லுவார்கள். முறையானது மாறுபட்டு, இதுபோன்று, உலகத்தில் நட்புள்ளவர்கள் இருப்பார்கள்.

ஆய்ந்தனர் அரிவை யுள்ள
அகம்மது அருளிச் செய்தார்
தோய்ந்தன போதில் ஆங்கே
துணிந்துடன் முழுகா ராகில்
பாய்ந்தனகுழவி தானும்
பகர்ந்திடும் புரட்ட தாகும்
மாயந்தன வீணே கொள்ளு
மனிதர்என் றறிந்து கொள்ளே. (23)

**உரை:** அகமது, அறிவுடன் ஆய்ந்து பின்னர் அருளினார்; அறிவுரைகளை ஏற்று அக்கருத்துகளில் நனைந்தார்கள். அங்கு தொடங்கி எல்லாம், அறிவு மயக்கம், ஆனால் மாறுபட்ட பேச்சு என்பார்கள். கருப்பையிலிருந்து குழந்தை குதித்து,

வெளியாகும். துன்பத்தை கொடுத்து இன்னம் நிரம்ப பயனற்ற மனிதன் என்று அறியவும்.

கலாஎன்னு மங்கை தன்னை
அடுத்துடன் மூழ்கிக் கொண்டால்
புலாஎன்னும் கர்ப்பத் துள்ளே
பொருந்திடும் ஓவிதானும்
நிலாஎன்னும் வடிவ தாகி
நீதியாய் அறிவு முண்டாம்
குலாவிய குணத்தா ளுக்கும்
தாயையும் வணங்கு வாரே. *(24)*

**உரை:** மங்கையை வளைத்துச் சேர்ந்து, அதனால் மகப்பேறு ஏற்படும். மகப்பேறு ஏற்படுவது இரத்தத்தில் ஓவியம் எனச் சேர்ந்திருக்கும். அழகிய நிலவின் உருவத்தில் மெய்யுடன் இருக்கும். மகிழ்ந்து நற்பண்புகளை உடைய குழந்தையைப் பெற்ற அன்னையை அடிபணிவார்கள்.

# திருமூலர் - கர்ப்ப வாகடம்

விழுந்தது இலிங்கம், விரிந்தது யோனி
ஒழிந்தது முதலைந்து, உயிரோ டேறி
ஒழிந்த அப்பு, தேற்றும் குணமும்
பொழிந்து, புகுந்தது, புணர்கின்ற போதே. (1)

**உரை:** புணர்கின்றபோது விரிந்தயோனி யுள்ளே புகுந்து, உடல் ஆண்குறியால் இன்பம் பெற்றது உடல். பெண்களுக்கு மகப்றேு உண்டாவதற்கு தக்கபடி பிறப்புறுப்பு அமைந்துள்ளது. நன்கு வளர்ச்சியடைந்தவுடன் மகப்பேறுக்கு தக்கபடியான மாறுதல்கள உண்டாகும். மார்புகள் பெருத்தல், இன உறுப்புகளில் முடி முளைத்தல்,பூப்பு வருதல் என்பன நிகழும். உயிரினங்கள் தோன்ற இனச்சேர்க்கை அவசியமாகும். சித்த மருத்துவம், பிறப்பை நான்கு பெரும் பிரிவுகளாகக் கூறுகின்றது. 1. முட்டையிலிருந்து தோன்றுதல், 2. விதையிலிருந்து தோன்றுதல், 3. பையிலிருந்து தோன்றுதல், 4. வியர்வையிலிருந்து தோன்றுதல். பறவைகள், ஆமை, முதலை என்பன முட்டையிலிருந்தும் தாவரங்கள் விதையிலிருந்தும் வியர்வை வழி, பேன் என்பனவும் கருப்பையின் மூலமாக மனிதர்கள், விலங்குகளும் தோன்றுகின்றன. ஆண்-பெண் சேர்க்கையானது. எல்லா உயிரினங்களிலும், இனப் பெருக்கத்திற்காகப் பெரும்பாலும் நடைபெறுகிறது. பண்டைத் தமிழரின் வாழ்க்கை அகம், புறம் என்று பிரிக்கப்பட்டது. இல்வாழ்க்கையை அகம் என்றும், ஏனையவை புறம் என்றும் கொள்வர். அகவாழ்க்கையிலும் திருமணத்திற்கு முன்னதாக ஏற்படுவது களவு என்றும், மணவாழ்க்கையைக் கற்பு என்றும் கொண்டார்கள். கைக்கிளை, பெருந்திணை என்பன நீக்கியதே நல்லறம் ஆகும். பெண்களுக்கு 16ஆம் ஆண்டும் ஆணுக்கு 20ஆம் ஆண்டும் திருமணத்திற்கான வயது என இன்ப நூல்கள் கூறுகின்றன. 12 அல்லது 13 வயதில் பெண்கள் பருவமடைதல் இயற்கையாகும். மாதவிலக்கு 28 நாட்களுக்கு ஒருமுறை வரும். மூன்று முதல் 5 நாள் வரை இருக்கும். 1 நாளைக்கு

35-45மி.லி. அளவு இரத்தம் வெளியாகும். ஒரு பெண்ணுக்கு 16 வயது முதல் 30வயது வரை கருத்தரிக்கும் வாய்ப்பு அதிகம். 30 வயதுக்குமேல், குறைவு. 45 வயதில் மாதவிலக்கு நின்றுவிடும். திருமணமானபின் 25 விழுக்காடும், ஓராண்டுகள் 80 விழுக்காடும் மகப்பேற்றை அடைவார்கள். இரண்டாண்டுக்கு மேல் மகப்பேறு இல்லை என்றால் உடலை ஆய்வு செய்யவேண்டும். மகப்பேறில்லாமல் போவதில் 50 பங்கு பெண்களும், 40 பங்கு ஆண்களுக்கும் உண்டு. ஆண்களுக்குள்ள விந்து 1 மி.லி. அளவில் 20 கோடி உயிரணுக்கள் பொதுவாக இருக்கவேண்டும். விந்தணுக்கள் விரைவாகச் செல்லும் போக்கு, வடிவம், அளவு என்பனவற்றைப் பொருத்து, மகப்பேறு அமையும். இரட்டைத்தலை, குறுகியதலை, பெரியதலை என்பன மகப்பேற்றின் தீங்குகளாகும்.

46 மரபு உயிரணுக்கள் மனிதனுக்கு அமைந்துள்ளன. பொதுவானவை 44 ஆகும். உடல் வளர்ச்சி முதலியவைகளைப் பற்றியன ஆகும். எக்ஸ், ஒய் என்பன பால்பற்றி முடிவு எடுக்கும் திறனைக் கொண்டவைகள. ஆணின் கரு 44 + **xy** என்றும் பெண்ணின் கரு 44 + **xx** என்றும் இருக்கும். சில சமயங்களில் மனைவியின் இரண்டு பெண் அணுக்கள், ஆணின் இரு அணுக்களுடன் சேர்ந்தால், இரட்டைக் குழந்தை பிறக்கும். இது இரண்டு ஆண்கள் அல்லது இருபெண்கள் அல்லது ஒரு ஆண் ஒரு பெண் என்ற வாறோ அமையும். கணவனின் முதலணுவும், மனைவியின் முதலணுவும் நோயுற்றதாக இருந்தால், குழந்தை நோயுள்ளதாகப் பிறக்கும். இது மரபுவழி நோயாகும். 45 + **xy** ஆண் குழந்தையாகப் பிறக்கும். உடல் ஊனம் அல்லது உளக்கேடுடையதாக இருக்கும். சர்க்கரை நோய், இதய நோய்கள், சிலவகை நரம்புக்கோளாறுகள் என்பன, மரபு வழியாக உண்டாகும்.

மாதவிலக்கு நின்றது முதல் 7ஆம் 8ஆம் நாள் வரை, மனைவியுடன் சேர, கரு உண்டாகாது. எனவே ஏனைய 11

நாட்களில் கரு உண்டாகாது. பெண்களுக்கு மாதவிலக்கின் போது உடல் வெப்பம் சிறிது குறையும். திருமூலரின் நூல் பற்றிய செய்தி, யூகியின் "வைத்திய சிந்தாமணியில்" வருகின்றது. "துடியான நாடி நூல் திருமந்திரமாமே" என்ற தொடர் உள்ளது. "அருகு நுனிபணி முத்துப்போலே" விந்தணுக்கள், பெண்ணின் கருமுட்டைகளுடன் கூடியவுடன் இறுகிவிடும். அது திரண்டு உருண்டுக் கருவாகும். வாயு கருப்பையை மூடும். திரண்ட கருவை வேலிபோலச் சுற்றி வளைத்துக் காக்கும் என்று யூகிமுனிவர் கூறுகின்றார். பெண்களில் கோபிகை, மோகனை, காமுகை ஆகிய வகைப் பெண்களும் வல்லியன், புல்லியன், மத்தியன் ஆகிய ஆண்களின் பிரிவுகளும் "தேரையரால்" கூறப்பட்டுள்ளன. இப்பிரிவுகளை உடலமைப்பு, இயல்புகளைக் கொண்டே வகுத்தார். மிகப்பெரிய ஆண்குறியை உடையவன். (12விரற்கடை) வல்லியன், இதற்குக் குறைவான குறியை உடையவன் (9 அங்குலம்) புல்லியன். மத்துப் போன்ற குறியை உடையவன் மத்தியன் என்று தேரையர் சேகரப்பாவில் கூயறியுள்ளார். பெண்களில் அத்தினி, சித்தினி, சங்கினி, பத்மினி என்று 4 வகைப்படுத்தி "போகர் சனன சாகரம்" எடுத்துரைக்கும் இவ்வகைப் பிரிவுகள், உடலமைப்பு, நிறம் ஆகியவைகளைக் கொண்டதாகும். அத்தினி-வெண்மை (குளிர்ச்சியான பகுதிப் பெண்கள்) சங்கினி (மங்கோலிய வகை) மஞ்சள் வண்ணப் பெண்கள்,பத்மினி வெப்பநாடுகளில் உள்ள பெண்கள், கறுமை நிறமுள்ளவர்கள் இவையல்லாதவகை சித்தினியாகும். இதையே அகத்தியர் தன் பஞ்ச காவிய நிகண்டிலும் எழுதியுள்ளார். இது தவிர வயதை அடிப்படையாக வைத்தும், 4 ஆகவும், 10 ஆகவும் பிரிக்கப்பட்டுள்ளார்கள். வடமொழியில் வருணை-16 வயது, தருணி 17 முதல் 30 வயதுவரை பேரிளம்பெண் 55ஆண்டுகள்; விருத்தை 56வயது; தமிழில் உள்ளவை பேதை 5 முதல் 7 ஆண்டுகள் பெதும்பை-8முதல் 11வயதுவரை, மங்கை 12-13 ஆண்டுகள், மடந்தை14-19 அரிவை 20-25; தெரிவை 26-32 ஆண்டுகள், பேரிளம் பெண் 33-40 ஆண்டுகள் என்று வாட்போக்கி என்னும் இரத்தினகிரி உலாவில் வருகின்றது. இது

போன்றே பாலன் 1 முதல் 7 ஆண்டுகள் மீளி 8 முதல் 10 ஆண்டுகள், மறவோன் 11-14 ஆண்டுகள்; திறலோன்-15 ஆண்டுகள்; காளை 16 ஆண்டுகள்; விடலை 17 முதல் 30 வயது வரை; முதுமகன்-30 ஆண்டுகளுக்குமேல். திருமணம் செய்யும் வயதை "பன்னீராட்டை பிராயத்தனாய் செல்லத் தக்கது, மற்றைய நிகழா" என்றனர். பெண்ணின் திருமண வயது 12, ஆணின் திருமண வயது 16 என்றறியலாம். ஐந்திணையாகிய ஒத்த காதலுக்கு மாறுபட்ட ஒருதலைக் காமம், பொருந்தாக் காமம் என்பதை கைக்கிளை என்றும், பெருந்திணை என்றும் கூறப்பட்டன. கைக்கிளை என்பது பிற்காலத்தில் ஆண்பால் கைக்கிளை என்றும் பெண்பால் கைக்கிளை என்றும் கூறப்பட்டன. பெருந்திணை முதுமையில் ஏற்படுவதாகும். கைக்கிளை புணராது நிகழும்; பெருந்திணை புணர்ந்தபின் நிகழும். இவையாவும் அகப்பொருள் இலக்கணமாகும். கலவியின் பொழுது பெண்ணின் பிறப்புறப்பு சுருங்கி, விரிவடையும். எனவேதான் "விரிந்தது யோனி" எனப்பட்டது.

**"போகின்ற எட்டும் ,புகுகின்ற பதினெட்டும்**
**மூள்கின்ற முத்துனும், நாகனும் எட்டு**
**நாலு புரவியும், பாகன் விடாவிடில்**
**ஏறவே, திரக்கில் இறைவன் நானுகுமாறவே"***(2)*

**உரை:** இப்பாடல் மறைபொருளாக உள்ளது.

**"போகின்ற எட்டும், புகுகின்ற பதினெட்டும்**
**மூழ்கின்ற முத்தனும், ஒன்பது வாய்த்தலும்**
**பாகலிடா எனில் பன்றியுமாமே".**

என்று திருமந்திரத்தில் பாடல் 457இல் வருகின்றது. இதற்கான விளக்கத்தை சித்த மருத்துவம் என்ற நூலில் காணலாம். ஐந்து நுண்பொருள்களை இரண்டாகக் கொண்டு, பத்தாக்கி, பத்திலே நான்கு நான்கு பகுதிகளாக்கி, அரைப்பங்கில் நான்கோடு நான்கும் கூட்டப் பருப்பொருளாகும். (தூலம்) இப்பொருளே உணடைப் பகுதி முதலியவைகளை ஆக்குவதாகும்.

இவ்வாறுண்டான பருப்பொருள்களின் கூற்றால் மண்ணில் என்பு, தசை, மயிர், தோல், நரம்பு நீரில் இரசம், இரத்தம், வியர்வை, சிறுநீர், விந்து, தீயில் வெப்பம் என்பனவும், காற்றில் பத்து வகையான வாயுக்களும் ஆகாய பத்து வகையான நாடிகளும் தோன்றும்.

"ஐம்பூதம் பத்தாக்கி, அவைபாதி
நன்நான்காக்கி" என்று "கைவல்லிய நவநீதம்" கூறும்.

"ஏற, எதிர்க்கில் இலையன் தானாகும்
நேரொக்க, வைகில் நிகர்போதந் தானாகும்
மாற, எதிர்க்கில் மறையவன் தானாகும்
பேரொத்த, மைந்தனும் பேரரசாறாமே". *(3)*

**உரை:** ஆணின் விந்தணுவும், பெண்ணின் சூலக அணுவும், அழகுடன் பொருந்த படைப்புக் கடவுளாகத் தோன்றும்.இதற்கு உடன்பட்டுத் தோன்றினால் அறிவுண்டாகும். சமமாக, மாறு பாடுடன் தோன்றினால், வேதங்களை மறுத்து, ஆகமங்களை அறிந்தவனாவான். இத்தகைய மகன் தோன்றிப் புகழுடன் நாட்டை ஆட்சிசெய்வான்.

ஆண்மிகில் ஆணாம் பெண்மிகில் பெண்ணாம்
பூணில் ஆண்டொத் துப்பொரு..........ந்
தான்மிகு மாசிற்றாணி முளுதானும்அ
பானம லமிஞ்சிப் பாய்ந்ததும் இல்லையே.*(4)*

**உரை:** ஆண் விந்தணுக்களுக்கும், பெண் விந்தணுக்களும் கருவின் பாலினத்தை உருவாக்கருவிலுள்ள மரபு வழிக்கோடுகளால் அரவானித் தன்மை உண்டாகும். சிவஞானபோதம் "அவன், அவள், அது எனும் அவை மூவினமையால்" என்று கூறும். சிவஞான முனிவர், பேருரையில் "அவன் அவள், அது எனும் அவை" என்பதற்கு ஆண், பெண், அலி எனும் பொருளை நீக்கிவிட்டு, அது என்பார் தான் என் முனைப்பான ஆணவம், உலகத்தை ஆட்சி செய்யவைக்கும். அபான வாயுவால் மலம் அதிகமாக வெளியாகாது.

பாய்ந்து பின்னங்கோடி........றாகும்
பாய்ந்து நாலோடில் பாரினில் எண்பதாம்
.............எய்வுப், பகுத்தறிந்து, இவ்வகை
பாய்ந்திடும் போதிக்கும்.........மாமே. (5)

**உரை:** *நாடி நூலின் கருத்துக்கள் இங்கு கூறப்பட்டுள்ளன. மங்கையின் மாதவிலக்குள்ளான நான்கு நாள் நீங்கிய ஐந்தாம் நாள் சேர, உண்டாகும் கருவின் ஆயுள் நூறாண்டாகும். (நோய் முதல் நாடல் திரட்டு-பாகம் 1-மா. சண்முகவேலு பக்.22) விந்தணுவு பலவாகப் பெருகி ஓடிக் கரு ஏற்பட அதன் வாழ்நாள் 80 ஆகும். சரப்பயிற்சியை நன்கு கற்றவர்கள், பயனுள்ளபடி, மூலத்தில் மறைவிடங்களில் செலுத்துவார்கள். சேர்க்கையின் போது. இடகலை, பிங்கலையில், ஐம்பூதங்களிலும் மூச்சுச் செல்ல, கரு ஏற்பட்டால், அதற்கு 100 ஆண்டுகள் உண்டு. நீர் முதலான நான்கு பூதங்களில் சென்றால் உண்டாகும். கருவுக்கு 80 ஆண்டுகள் ஆகும். (நோய் நாடல், பாகம்-2-பக்.38) மூச்சுக்காற்றை தன் விருப்பப்படி செலுத்த, சரப்பயிற்சியை (ஏற்றி, இறக்கி, காற்றை அளக்கும்- திருமந்திரம்) உடையவனே, யோகி எனப்படுவான். பூப்பு காலத்தில் மனைவியிடம் சேருவது தவறு என்று கூறப்பட்டுள்ளன. சீன மகளிர்க்கு இந்நெறி இல்லை என்பதாக போகர் 7000இல் கூறுகின்றார். மாதவிலக்கு காலத்தில் வீட்டு வேலைகளை செய்யமாட்டார்கள். எனவே, "கலந்தொடா மகளிர்" என்று அழைக்கப்பட்டனர். இது சங்க காலப் பண்பாடாகும். மேலும் மாதவிலக்கானதைக் காட்டுவதற்காகச் சிவப்புநிற ஆடைகளை அணிந்தார்கள்.*

பாயுகின்ற, வாயு, குறுகில் குறளாகும்
பாயுகின்ற வளைக்கின் முடமாகும்
பாயுகின்ற, வாயு, நடுப்படில் கூனாகும்
பாயுகின்ற,வாயு மாதர்க்கில்லை பார்க்கிலே.(6)

**உரை:** *தலைமையாக உள்ள கருப்பையில் ஆண் அணுவுடன் உயிர்வளி (பிராணவாயு) குறைவாகச் சென்றால்,*

கரு, வளர்ச்சியைப் பெறாது. இதனால் குழந்தையின் உயரம், குறைவாக இருக்கும். வலியுடன், வெள்ளை நிறமுள்ள சளி (கோழை) உள்ளே செல்ல, உடல் உறுப்புகளில் குறைபாடுகள் தோன்றி, ஒன்றோ, பலவோ செயல்படாது. வருந்தும்படி ஆண் அணுக்கள் முதன்மையான மறைவிடங்கள், மையம் போன்ற இடங்களில் செலுத்தப்பட்டால், உடலில் வளைவு உண்டாகும்.

*மாதா, உதரம் மல........தள*
*மாதா உதரம் சலமிகின் ஊமையாம்*
*மாதா உதரம்..........கண்ணில்லை*
*மாதா உதரத்தில் வந்த குழவிக்கே.* *(7)*

**உரை:** வியப்புத்தரும் அழகுடன் உள்ள பெண்ணின் கருப்பையில் இறுக்கம் அதிகமானால் "உயிர்வளி" என்ற பிராணவாயு கருவுக்கு அதிகம் செல்லாது. இந்நிலையில் குழந்தையானது, பிறவி மூளைக் குறைபாடுடன் பிறக்கும். தாய் துன்பமடையும்படி, கருப்பையில் சுழற்சி அல்லது நடுக்கம் தோன்ற பிறவியிலேயே குழந்தைக்குப் பேச வராது. பெண்ணின் கருப்பைக் குழியில் குழந்தை இணையாகச் சுற்ற, குற்றமுள்ள வலிப்பு உண்டாகி இறப்பு நிகழும். கருப்பையில் உள்ள குழந்தை வெளிவராதபடி அதன் அமைப்பு முக உதயம், தோள் உதயம், குறுக்கு உதயம் போன்றிருந்தால் அல்லது நஞ்சுக்கொடி கருவை சுற்றிக்கொண்டிருந்தால் தாய்க்கு வலியும், துன்பமும் இருக்கும். குழந்தைக்கு மரணமும் ஏற்படலாம். மகப்பேற்றின் போது ஏற்படும். இழப்புகள் அதிகம் என்று அரசு புள்ளி விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**குழவியும் ஆணாகும் வலத்ததாகில்**
**குழவியும் பெண்ணாம் இடத்ததுவாகில்**
**குழவியும் இரண்டாம் அபாதைக்.........**
**குழவியு மலியாகும் கொண்ட காலொக்கில்.(8)**

**உரை:** குழந்தையை மேன்மையானதாகச் சொல்லலாம். மனைக்குப் பெருமையாக உள்ளது. குழந்தையைக் கருப்பை யிலிருந்து வெளியேற்றும் ஆற்றல் அபானம் ஆகும். இது வெளியே தள்ளாதபோது. அகலப்படுத்த வேண்டும். அடிப்பாகத்தை ஒத்திருநதால், மிகப் பேறுக்கான வலி ஏற்படும் மகப்பேற்று வலி அதிகமானால் குழந்தை பிறக்கும்.

**கொண்ட நல்வாயு, இருவர்க்கு ஒத்திடில**
**கொண்ட குழவியும் கோமளமாய்விடும்**
**கொண்ட இவ்வாயு, இருவர்க்குள்ளாரில்**
**கொண்டதில்லையாம், கோலமுன்னதே. *(9)***

**உரை:** பெண்களுக்குரிய கருவை உண்டாக்கும், பெண் உறுப்பு வானம் (ஆகாயம்) மனைவியின் கருப்பையில் பொருந்தும் சுரோணிதம் மண்ணாகும. தீயும், காற்றும் விந்துவாகும். பெருமையுள்ள தண்ணீர் இவைகளுக்கொப்பாக உயிரை வளர்க்கும். உயிர்களை வாழ வைப்பதால் பெண், நிலத்திற்கு ஒப்பாவாள்.

**உன்னிய கர்ப்பக் குறியாம் வெளியிலே**
**பன்னிய, நாதம், பகர்ந்த பிருதுவி**
**வன்னியம் வாயுவும்.....................**
**மன்னிச் சமனாய், வளர்க்க், உதகமே. *(10)***

**உரை:** ஏற்ற தலைமையான மறைவிடங்கள் குறித்து ஒன்றில் பட்டுச் சேர்ந்துகொள்ள, குழந்தை அழகுடன் பிறக்கும். முதல் மூலமான மறைவிடங்களைக் காட்டும். நிறைவான இல் வாழ்க்கையை மேன்மையான அழகுள்ள இப்பிறவியான இம்மையில் அறிந்துகொள்ளலாம்

**உரை:** கருக்குழி-ஆகாயம், நாதம-நிலம், விந்து-தீ, காற்று ஆகும். கருவளர இடமளிப்பது. கருப்பையாகும. கருவை உணடாககுவதும் உணவையளிப்பதும். நாதம்-வளர்ச்சிக்கு வேண்டிய வெப்பம், காற்று என்பன விநதுவில் உள்ளது. விந்து, நாதம் இணைந்து, கரு உண்டாகும். விந்துவில்

வெப்பம், காற்றையும், பெண்ணின் நாதம் (சூல்கள்) ஏற்றுக்கொண்டு தொழில் புரியும். நீர்போன்ற நாதம், இரச தாதுவிலிருந்து, இரத்த தாது முதலில் உண்டாகும்.

*(சித்தமருத்துவ நோய் நாடல் - மரு. மா. சண்முகவேலு- பாகம்-1, பக். 23)*

**உதகமும் ஆற்றும் கலால் வாயுவால்**
**சிதகிற, அங்கங்கள் செய்து முடித்திடும்**
**பதல், குறுரோமப் பகுத்த சதையத்தி**
**நிதற்கு கரு ஒன்பது வாசலும் நீங்குமே. *(11)***

**உரை:** உதகம் என்ற நீரானது உடல் வலிமையடைய உதவும். தீ, காற்றால் ஒரேவிதமாக சிந்தும்படி செய்து, எலும்புகளாக முற்றுவிக்கும். பக்குவப்பட்ட உரோமம், என்பு, சதை என்று உடல் நீக்கப்பட்டுப் பிரிக்கப்படும். ஒன்பது ஓட்டைகளை உடைய ஐம்பொறிகளான உடல், நாள்தோறும் காற்றை மேலிழுக்கும். இழுத்தல், நிறுத்தல், விடுதல் ஆகிய மூன்று செயல்கள் இயல்பாக நடைபெறும். இதையே இங்கு குறிப்பிடுகின்றார்.

**நீங்கிட, நீங்கிட வளைந்தோங்கும்**
**ஓங்கிட ஓங்கிட உறுதியாம் வாயு**
**வாங்கிட வாங்கிட வன்னித் தலைப்படும்**
**பாங்கிட, பாங்கிட, பத்தாகும் திங்களே. *(12)***

**உரை:** காற்று விலகி, அகலமாக நெருங்கி உயர்ந்து எழும்பும். பெருமையுறு வலிமையான வாயு எழும்பும். இவ்விரண்டும், காற்றின் இயல்பை கூறும். வளைத்த பத்துச் சிறப்புடன் தீயின் வெப்பம், அழகாக பத்துமாத காலம் கருவுக்கு நன்மையைச் செய்யும்.

**திங்களும், பத்தாதாகில்,தேயுடன் வாயு**
**அங்கி மலத்திய அமளியாய் கீழ்நோக்கி**
**பொங்கி பிறந்தநாள், புகழ்வார், வெறுவீணர்**
**தங்கிச் செனிக்கையில், தானே, உற்றதே. *(13)***

**உரை:** 10ஆம் மாதத்தில் தீ, காற்று சடராக்கினி, இரத்தம், நீர் என்பன அடிப்புறம் அதிகமாக துன்பம் தரும். குழந்தை பிறந்த காலத்தை பயனற்றவர்கள் போற்றுவார்கள். கரு பையை விட்டு, அசைந்து ஈரமுடன் தகுந்த வலியுடன் பிறக்கும்.

**உற்ற வியாதி உறுதியாம் என்நந்தி**
**பற்றியமூலம், பகர்ந்திடும் நாடிதான்**
**எற்றியாம் தோற்றம் எழுபத்து, ஈராயிரம்**
**மற்ற, யிது பத்தும், வளமான நாடியே. (14)**

**உரை:** 72,000 நாடி நரம்புகளை இவ்வுடல் தலைமையாகக் கொண்டதாகும் என்று நந்திதேவர் உறுதியாக வரையறுத்தார். செழுமையான பத்து இரத்தக்குழாய்கள் அடையாளமாகும்.

**வளமான பத்தில், வழங்கும் தசவாயு**
**வளமான இடை பின், சுழி என்று மூன்றும்**
**களமான சக்கரம், காட்டியதாலுண்டு**
**தளமான, மண்டலந்தான், மூன்றும்**
**பாருமே. (15)**

**உரை:** செழுமையான பத்துவகையான காற்று உடலைப் பற்றி இயங்கும் இடதுபுறமுள்ள மூக்கு, பெருமைமிக்க வலதுபுற மூக்கு இவைகளுக்கு நடுவான சுழுமுனை என்பன, பிறப்புக்கு இடமாகும். வட்டமான இடகலை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்றையும் ஒரு கூட்டமாகப் பார்க்கவும். இது பிராணமய கோசமாகும்.

பாருஇடை பிங்கலை இரண்டும் மாறியே
தாரும் பெருவிரல் காலோடு கானேறிக்
காரும் கழுத்தின் கபாலம் வரைநின்று
வாருமிடமாம், வலக்கரம், சாருமே. (16)

**உரை:** உடலில் உள்ள மூன்று நாடிகளில் இடை கலையும், பிங்கலையும் முரண்பட்டவைகளாகும். காலின் பெருவிரல் முதல் தலைவரை இவை இருக்கும். வலது காலின் பெருவிரலுடன் இடதுபக்க மூளையும், இடது கால் பெருவிரலுடன் வலது பக்க மூளையும் செயல்படும். இதை இன்றைய அறிவியல் ஏற்றுக் கொள்ளுகிறது. எப்போதும் உயர்ந்த பசுமைச் சோலையின் மணமாக, மூன்று நாடிகளும், வாதம், பித்தம், கபம் என்று வரிசையாக, வலது கையில் இருக்கும். இதைக்கொண்டே நோய் பற்றியவைகளை அறிவார்கள்.

**வலக்கரம் தன்னில், வளமான பிங்கலை**
**நிலக்கை, இடக்கரம் நின்ற இடையாகும்**
**துலக்க நடுமையம் சுழுமுனையே ஓடுமே**
**பிலக்கஇது மூன்றுளப் பிறந்தது தாதுவே. *(17)***

**உரை:** மூன்று வகையான நாடிகளைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. வலது கையில் பிங்கலை நாடி செழுமையாக இருக்கும். உறுதியுடன் இடகலையும், சிறந்த சுழிமுனை நாடி நெருங்கி, நடுவாகவும் இயங்கும். வன்மையுள்ள இவைகள் மூன்றும், கரு உண்டானபோதே உடலில் ஏற்பட்டதாகும்.

**தாதுமுறைகேள் தழைத்த வாதம்**
**போதறு பிங்கலை புகன்றது பித்தமாம்**
**மாது சுழிமுனை வழங்கிடு மெய்கண்ட**
**ஓதுமுறை பார்த்து உணர்ந்தவர் சித்தரே. *(17)***

**உரை:** மருத்துவ நூல்களில் கூறப்பட்டவைகளை அறிந்து, நோயின் தன்மைகளைக் கண்டறிந்தவர்கள் சித்தர்கள் ஆவர். நாடியை அறிந்துகொள்ளும் வழியைக் கேட்டு அறியவும். செழித்த "இடகலை" வாதத்தை அறியும் நாடியாகும். பித்தத்தை "பிங்கலை" நாடியால் அறியலாம். நடுவாக உள்ளது "சுழிமுனை"யாகும், இவற்றை அறிந்துள்ளவர்கள் சித்தர்கள் ஆவர்.

**உணர்ந்த அபானன், உறுமந்த வாதத்தில்**
**புணர்ந்த பிராணன் புகுமந்த பித்தத்தில்**
**அணைந்த சமானன் அடங்கும் கபத்தோடு**
**பிணைந்திது மூன்றும் கெடுத்த குறை யொன்றே***(19)*

**உரை:** *மிகுதியான அபானவாயு வாதத்திலும், பிராணவாயு என்ற உயிர்வளி பித்தத்திலும், சமானவாயு கபத்திலும் சேரும். சேர்ந்த மூன்றுவகை நாடிகளின் பெயர்களை விலக்கி, ஒரே பெயராக "நாடி" என்று அறியலாம்.*

**குறியாம் வலதுகரம் குவிந்த பெருவிரல்**
**மதியாம் அதன்கீழ் வைத்திரு மூவிரல்**
**பிரிவாக மேலேறி, பிலத்தது வாதம்காண்**
**அறிவாய், நடுவிரல் அறிந்தது பித்தமே.** *(20)*

**உரை:** *நாடி பார்க்கும் முறை கூறப்பட்டுள்ளது. நாடி, வலது கை பெருவிரலின் கீழப்புறம் மறைந்திருக்கும். கையை மூன்று விரல்களை வைத்து அழுத்திப் பார்க்கவும். வலிமையாகத் துடிப்பது வாதநாடி என்றும் நடுவிரலால் அறிவது பித்தநாடி என்றும் அறியவும். இவ்வாறு நாடிகள் பற்றி கூறப்படுகிறது.*

**பித்தத்தின் கீழே புரண்டதது ஐயமாம்**
**உத்துத்துப் பார்க்க ஒருநரம்பேயாகும்**
**பத்தித்த மூவரும் பாயும் ஓர்வேகத்தில்**
**மத்தித்த தாளம் வழங்கும் நரம்பியதே.** *(21)*

**உரை:** *பித்தநாடியின் கீழ் மாறி, மாறி வருவது கப நாடியாகும். ஏனையவற்றை நீக்கிவிட்டுப் பார்க்க, ஒரு நரம்பு மட்டுமே இயங்கும். மூன்று நாடிகளையும் வரிசையாகக் காண, ஒரே நிலையில் இயங்கும் ஒழுங்குடன் நரம்புகளின் நடையை, இசை போன்று அறிவிக்கும் மாறுபட்ட ஒலியைக்கொண்டு, மகப்பேறு போன்றவைகளையும், ஒழுங்கற்ற நடையைக் கொண்டு நோய்களையும் அறியலாம். மகப்பேறு பற்றி தெரிவிப்பது "கர்ப்பநாடி" என்பார்கள்.*

வழங்கிய வாதம் மாத்திரை ஒன்றாகில்
தழங்கிய பித்தம் தன்னில் அரைவாசி
அடங்கும் கபந்தான் அடங்கியே காலோடில்
புறங்கிடும் சீவன் பின்னொன்று
இல்லையே. *(22)*

**உரை:** வாதம் என்ற வளியின் அளவு ஒரு மாத்திரையாகும். பித்தம் அரை மாத்திரை அளவையும், கபம் கால் பங்கும் தங்கி இயங்கும். உயிர் ஒப்பற்றது. இதற்கு இணை வேறு இல்லை எனலாம். "மாத்திரை என்பது ஒரு கோதுமையளவு உயர எழுந்து, தாமும் நேரமாகும். வளி வன்னி ஐக்கு வழங்கிடு மாத்திரை" (நோய் நாடல்-பாகம் 1, மா. சண்முகவேலு).

இல்லையே வாதமொழி நடை கோழியாம்
இல்லையே நறி பித்தமே எழும்பும்.........
ஒல்லையே ஐயம் ஊர்ந்திடும் சர்ப்பம்போல்
இல்லையே கண்டறிந்தவர் சித்தரே. *(23)*

**உரை:** வாதம் என்ற குற்றத்தை நாடியே பிடித்துப் பார்க்க, கோழி போன்ற நடையை உடையது. பித்தக் குற்றம் தவளையைப் போல், வியப்புடன் எழுந்திட இடம் தரும். கபம் விரைவாக பாம்புபோல் ஓடும். நுண்மையாக இவைகளைப் பற்றித் தெரிந்தவர்கள், சித்தர்களைத் தவிர யாரும் இலர். இது குறித்து மாறுபட்ட கொள்கைகளாகும் உள்ளன. வாதம், பாம்பு போன்ற நடையை உடையது. கபம் மயில் போல் நடையுள்ளது. **"Assumes the zig-zag posture of a serpent".**

அறிந்திடும் வாதம் அடங்கும் மலத்தில்
பிரிந்திடும் பித்தம் போரஞ் சலத்திலே
அறிந்திடும் ஐயம் வாசிக்கும் விந்துவிது
விரைந்திடு மூன்றுரு உறவாம் தலமிதே. *(24)*

**உரை:** அறிந்துள்ள பிணிக்கூறுகள். அழுக்கில் அடங்கும். அசைவால், மயக்கம், தனியாக்கும். எல்லோரும் அறிந்த மூச்சு நீர்த்துளியான குற்றம்; மூன்று வகையான குற்றத்தினால் எழுந்த நோய்கள், அளவுடன், இசைப் பொருந்திப் புற்றுமிடமாகும். எண்வகைத் தேர்வால், மலம், சிறுநீர், உமிழ்நீர், விந்து என்ற உடல் அழுக்குகளால் நோயை ஆய்வு செய்யலாம்.

**தலங்காட்டி இந்தச் சடமாகும் ஐம்பூதம்**
**நிலங்காட்டி நீர்காட்டி, நின்றிடும் தீகாட்டி**
**குலங்காட்டி வானில் குடியாய் இருந்ததே**
**வலங்காட்டி வாயு வானத்தில் இருந்ததே. *(25)***

**உரை:** ஐம்பூதங்களான இடத்தை உயிர் காட்டும். நிலம், நீர், தீ, வானமும், வானத்தில் உள்ள வெற்றியைத் தரும் வளி, வாயுக்களும் அங்கு வாழ்விடமாகத் தங்கும் என்று திருமூலர் நாடி கூறும்.

**இருந்து அஞ்சதாலே எடுத்த சடமிது**
**பிரிந்திடு மாங்கிசம் பிருதுவிமயம்**
**சொரிந்திடு இரத்தநீர் சேர்குறி அப்புவாம்**
**வருந்திய வன்னி, வளமாய் வெதும்புமே. *(26)***

**உரை:** ஐம்பூதக் கலப்பால் உண்டான உடலில் ஏழு உடற்கட்டுகள் உள்ளன. கப வகைகளிலிருந்து மாமிசத்தைப் பிரித்தால், அது நிலத்தின் தன்மையதாகும். இரத்தம், நீர் என்பன மிக்க கொடுத்து, இலக்குடன் பொழியும் நீரின் தன்மையாகும. வாடுதலைச் செய்யும் தீ, உடலைச் செழுமையாக வளர்ச்சியடையச் செய்யும்.

**வெதுப்புடனே விடுபட்டு நாசியில்**
**எதுப்புத் புற்றுநிற்கும் இது வாயுசாகது**
**போத்து எல்லாம், அங்கப்பணிந்திட மிட்டுது**
**போத்து நிற்கும் வானின் வளப்படுமே. *(27)***

**உரை:** மூக்கிலிருந்து வாட்டமுடன் வெளியாகும் காற்று. இது ஆகாயத்தில் செழுமையாக இருக்கும்.

**வளப்பம்கேள் பூமி வாசிக்கும் நாசியில்**
**தளப்பமாய வன்னிதானு அங்கண்ணிலே**
**அளப்பமாய் அப்பு அசங்கிடு நாவிலே**
**புளப்பூ நல்வாயு பரிச்சிக்கும் எங்குமே. *(28)***

**உரை:** உடலில் உள்ள உறுப்புகள் ஐம்பூதமாக இருக்கும் முறை கூறப்பட்டுள்ளது. வளமான நிலம்; கொழுப்பு ஆகும். அழகான கண் தீ என்று காதணியை அணிந்தவளே, அறியவும, ஆய்ந்தறிய எண்ணற்ற உணவுகளைச் சுவைக்கும் நாக்கு நீரின் தன்மையது வளி காற்று, நிலத்தில் நடை போட்டு எங்கும் வீசி உள்ளிழுக்கும்.

**எங்கிய காதில் இருந்துறு ஆகாயம்**
**பொங்கிய அஞ்சுக்குள் பொல்லாது மூணுமே**
**தங்கியவாயு, சமர்த்தன் மிக வாதம்**
**பங்கிய வன்னியால் பகுந்தது பித்தமே. *(29)***

**உரை:** ஆகாயம் எங்கும் மிகுந்தது. இது காது முதலிய ஐம்பூத உறுப்புகளில் மிக்க தீமையை சார்ந்து ஏவுவதாகும். நிலைபெற்ற காற்று வல்லமை கொண்டது. வகைப்படுத்தப்பட்ட பித்தம் தீயின் கூறு எனலாம். பித்தத்தை 5 பெரும் பிரிவுகளாக சித்த மருத்துவம் கூறியுள்ளது. பாசகம், இரஞ்சம், சாதகம் ஆலோசகம், பிராசகம்.

**பகுந்த சலத்தில் பரிசிக்கும் நல்லயம்**
**வருத்த இது மூன்றால் வளர்ந்தது**
**நோயயெல்லா**
**மகத்தான் அறிந்து அளவிட்ட யோகிக்கும்**
**மகிழ்ந்தே இது நின்ற மயக்கம் அறிவனே. *(30)***

**உரை:** வகைப்படுத்தப்பட்ட உயிரினங்கள் தொடும் நீர் நன்மையை (கபம்) செய்யும். பரவும் நோய்கள் எல்லாம், வாதம் பித்தம், கபம் என்ற மூன்றுவகைகளால் உண்டாகும். என யாகம் செய்யும் யோகிகள் ஆய்வு செய்து அறிந்தார்கள். இந்த சோம்பலை நீக்கி எப்போதும் இன்பமுடன் கணிப்பார்கள். யோகிகளான அறிவர்கள்.

**அறியவே மூன்றின் ஆண்மை சொன்னார்**
**என்நந்தி**
**வறிய நல்வாதம் எரிக்கும் குணம்கேளு**
**குறியெனக் கைகால் உளைச்சல் விலாசத்து**
**பறியென நொந்துடல் பச்சைப்**
**புண்ணாகும். *(31)***

**உரை:** எல்லாரும் தெரிந்துகொள்ள நந்திதேவர் மூன்று வகையான தன்மையுள்ள நாடிகளைக் கூறினார். குறிப்பாகச் சொன்னால் காற்றின் சீரணிக்கும் இயல்பைக் கேட்கவும். கைகால்கள், மூட்டுகள், விலாப்பொருத்துகள் போன்ற உறுப்புகளில் வலிப்பது வாயுவின் அடையாளமாகும். உடலிலுள்ள தோல், தசை என்பனவற்றை அழிக்கும்.

**புண்ணாய் வலிக்கும் பொருமும் குடலோடித்**
**தண்ணா மலத்தைத் தம்பிக்கும் போகாது**
**ஒண்ணான ஆசனமுருகச் சுருங்கிடும்**
**பண்ணார் குளிர்சீதம் பகுந்திடும் வாதமே.*(32)***

**உரை:** தசைகளில் வேதனை, வயிற்றில் இரைச்சல், ஆசனவாய் நரம்புகள் சரிவர சுருங்கி விரியாமல் மலம் இறுகி எளிதில் வராமல் தடையாக இருப்பது. தெளிவாகக் கூறினால் பேரொலியுடன் காற்றும் நீரும் வெளிவரும் இதை தகுதியுடைய மருத்துவர்கள் வாத குற்றத்தால் வந்தது என்று கூறுவார்கள்.

*விடங்கிய ஐயம் மேலிரைப்பு ஏற்றிடும்*
*தடங்கிய இருமிடும் தனிவிலா இரண்டுநோம்*
*அடங்கிச் சுரம்காயும் அளவற்ற கோழையாய்*
*இடங்கிய உடல்வற்றும் இரத்தம் சுக்குமே.(34)*

**உரை:** நல்லுருவமுள்ள நீரின் செயலுள்ள உயர்ந்த கபத்தைப் பற்றிக் கேட்கவும். குத்துதல், பிடிவாதம் (80 வகை வாதநோய்களில் ஒன்று) சடராக்கினி, இருமல் காரணமாக இரு விலாக்களில் வலி உண்டாதல், சுரநோயால் உடலில் வெப்பம் தோன்றுதல், அதிகமான உமிழ்நீர், உமிழ்நீரில் இரத்தம் வாய்வழியாக இரத்தம் வெளியாதல், உடலில் முழுமையாக எடை குறைதல் ஆகியவை களை நீரால் ஏற்படும்.

*கக்கிய மூவருக்குள் காணீர் பலங்கேளு*
*ஏக்கிய வாயுவுடன் கூட்டிலே பலன்*
*தக்கியவாயு சகலத்துக் காதாரம்*
*சிக்கிய, நோயை சிறக்க விளக்குமே. (35)*

**உரை:** மூன்று வகையான வாத, பித்த, கபம் ஆகியவற்றின் பொருளை அறியவும். காற்றை மூக்கின் வழியாக இழுப்பது. பயனுள்ள துணையாகும். உடலையும் நிலைக்கச் செய்யும் இளைக்கச் செய்யும் நோயின் மதிப்பை எடுத்துக் கூறுவேன்.

**விளக்கிய வன்னியும் வாயுவும் மேல்கொண்டால்**
**தளக்கிய தாபசுரம் காணும் தோடமாம்**
**மளக்கிய அப்புவும் வன்னியும் மேல்கொண்டால்**
**இளக்கிய சீதசுரம் காண் தன் பேரே. (36)**

**உரை:** தீயும் காற்றும் அதிகமாகச் சேர்ந்துள்ளதைப் பற்றி விளக்குவேன். வருந்தும்படி தாப சுரத்தைப் பெறுவார்கள். நீரும், தீயும் அதிகமானால் பெரிய வலியுடன் சீதசுரம், குளிர்சுரம் என்பன ஆன்மாவை உரிமையுடன் அசைக்கும்.

பேரான தோடம் சிறக்கும் முறைகேளு
வாரான வாதமும் வன்னிக் கருந்தோடம்
தாரான பித்தம் அதநாவாறில் வெண்மையாம்
சேரான அய்யவாயு சிவப்பேற்றுக்
கொண்டதே. *(37)*

**உரை:** தீங்கு உண்டாக்கும் வேறான தன்மையை காதால் கேட்கவும். அந்த வரிசையில் தீயும், காற்றும் கறுப்பான குற்றங்களுக்குக் காரணமாகும். ஒழுங்கிய பித்தம், நாக்கு இதழில் நீர் சுரக்கும், திரண்ட கபத்தால் வெண்மை நிறம் நிலம், காற்றும் சேர்ந்து ஏற்படும். பொருத்தமாக சிவப்பு நிறத்தைப்பெற்றது.

**கொண்டிடும் தோடக்குறி சொன்னார் என்நம்பி**
**தண்டு, முதடும் தனிப்பல்லும் நாக்கும்**
**மண்டிடும் தாதுவளமாய் கறுப்பேறில்**
**ஒண்டிடுமே உறுதியாய் சாவனே.** *(38)*

**உரை:** நந்திபெருமான் குற்றங்களின் அடையாளங் களைக் குறித்து மருத்துவர்களுக்குக் கூறினார். உதடுகள் ஒப்பில்லாத பற்கள், நாக்கு என்ற உறுப்புகள் அதிகமாகக் கறுப்பு நிறத்தைப்பெறும். மூன்று நாடிகளும் ஒன்றாகச் சேர்ந்து இக்குறிகளைக் காட்ட உயிருக்குக் கேடு உண்டாகும்.

**அறைந்திட்ட சன்னிகேளாத கர்ப்பத்தில்**
**அறைந்திடும் சீழ்தான் உள்புகில் வாயுவாம்**
**விரைந்து மிகவியர்க்கும் மெய்யில் மயக்கமாம்**
**துறந்திடும் பல்கெட்டுச் சேர்ப்பிக்கும்**
பாருமே. *(39)*

**உரை:** நட்புடன் சன்னி நோயைப் பற்றிக் கூறுகின்றேன். மகப்பேறில் கீழ் இருந்து காற்று உள்ளே செல்ல அதிக வேகத்துடன் வியர்வை, மயக்கம் ஆகிய பலவற்றைக் கூட்டி, வரம்பு நீக்கி, கெடச்செய்யும் என்பதைப் பார்க்கவும்.

பாருமே பெண்தான் பச்சை உடம்பாங்காள்
ஆடுமே துறுபோகம் தனிக்காடி உண்ணுதல்
ஆறுமே மாப்பண்டமாம் ஆகாதமாங்கிசம்
கோருமே கொண்டகால் கொண்டிடும்
கன்னியே.(40)

**உரை:** காணவும், பெண்ணின் பிறப்பு அழகானது. பசலையை உடையது. சமைத்தல், தனிமையில் உண்ணுதல், மாவுப் பொருள்களால் ஆன உணவுகள், புலால் உணவுகள் ஆகியவைகளை விரும்பிச் சாப்பிட "சன்னிநோய்" வரும். நோய்கள் வருவதற்கு 1.உணவாதிச் செயல்கள், 2.இச்சாதிச் செயல்கள், 3.அண்ட, பிண்ட வேற்றுமைகள் காரணம் என்று சித்த மருத்துவ நூல்கள் கூறுகின்றன. சன்னிநோய் முன் குறிப்பிட்டுள்ள இரண்டு காரணங்களால் உண்டாகும்.

கொண்ட மலடிக்குக் கட்டுமே சன்னிதான்
வண்டரிது கால் மாதின்பால் அருமாறான
அஸ்பால்
தண்டிய அணைவாள் சூதகக்காயத்தின்பாள்
ஒண்டிய பெண்ணுக்குப் போட்டு
சன்னியே.(41)

**உரை:** முதலாக உடலின் சன்னி என்ற முக்குற்றப் பிணி வணக்கமுடன் சேரும். இது இனிய பற்றுக்கு அடையாளம் உடல்மேல் பகையுடன் உள்ள நோயாகும். இதை நாழிகை அறிவிப்போர் கழுவாயாக கூறுவார்கள். சன்னிநோய் குழந்தை பெற்ற பெண்ணைச் சாரும். வயதானவன் உடல் துன்பத்தை தரும். இதை நீக்க ஒப்பற்ற ஒளியைத் தரும்.

ஒரெட்டு சன்னி உற்றது பெண்ணுக்கு
வாரெட்டுஆணுக்கு மகத்தான சன்னி
நேரிட்டுப் பார்த்தால் நெகிழ்ந்தது வெவ்வேறு
பாரிட்டு மெய்யில் பகுந்து பதம் பாரே. (42)

**உரை:** சன்னி என்ற முக்குற்றப் பிணி, ஒரு பெண்ணைப் பொருந்திச் சேரும். வரிசையாகத் தொடர்ந்து பெரிய தீங்கை,

முக்குற்ற நோய், இனிமையாகச் செய்யும் வலிமையுடன் நெருங்கி, தனித்தனியாக ஏழு உடல்கட்டுகளையும், தளரச்செய்யும். பெருத்த, உடலின் பக்குவத்தைத் தெளிவாகக் கூறுகின்றேன் கேட்பாயாக.

**பதமாம் சுகசன்னிப் பாயும்விதம்கேளு**
**நிதமாய் மூழ்கி நிறைவே சாப்பிட்டு**
**குதமாக மந்தத்தில் கூடிய வாயுதான்**
**அதமாக அனுபோகம் அணைந்திடில்**
**சன்னியே.*(43)***

**உரை:** மடியை (சோம்பல்) உண்டாக்கும். அபான வாயுவாலும், அழிவு தரும் இன்ப நுகர்ச்சியாலும் (சுக) சன்னி நோய் ஏற்படும்.

**சன்னிசுத்தினால் தானேறும் வியர்வை**
**கன்னி சுகத்தினால் கண்கள் சிவப்பேறும்**
**வன்னி சுகத்தினால் வழங்க மகா தோசம்**
**மன்னி சுத்தினால் மரணங்கள் புகுமே. *(44)***

**உரை:** சுரநோயின் இணக்கத்தால் வியர்வை உண்டாகும். இளமை காலத்தில் துய்த்த இன்பம் காரணமாக சுரநோய் ஏற்படும். இதன் அறிகுறியாக கண்கள் சிவப்பாக மாறும். தீக்குற்றக் கூட்டு அதிக நாடிக்கொதிப்பை உண்டாக்கும். உடல் நலத்துக்கு இடையூறு ஏற்பட்டுத் தீங்கை விளைவிக்கும்.

**புக்கிய இயல்புக் கட்டி ஒருவிரல்**
**எக்கிக் குதித்தால் இதுகாண மகாதோசம்**
**அக்கிய உந்தி கேளாத ராம வாயுக்கும்**
**அக்கு மக்கும் தலமாம் மகத்தான காயமே. *(45)***

**உரை:** (இப்பாடல் வைத்தியப் பகுதியில் இல்லை.) உடலின் புகுந்த தன்மை இறுகிய பொருளாக கலத்தலாகும்.

மிகுதியாக வயிற்றைச் சுருக்கி ஒருவிரலளவு நாடி எழும்பி, விழுவதைப் பார்ப்பது. பெரும் தீங்காகும். கண், வயிறு ஆகிய உறுப்புகளில் நுழைந்த வாயு, பகையாகும. நட்பான அடைமண் உடலின் (பிருதுவி) இடமாகும்.

**காயத்தின் மூலம், கண்டவிதம் கேளு**
**மேயாத தீபனம், பரிந்து, அடக்கிடில்**
**மாயத்தில், மாய்கையில் மலத்தை அடக்கிடில்**
**ஒய்ந்த, குண்டலியுள் புகம்வாயுவே. *(46)***

**உரை:** உடலின் தலைமைப் பகுதியைப் பார்த்து செயலைக் கேட்கவும். மேலான உணவை அடையாமல், மிக பசியை ஏற்றுக்கொண்டு அடக்குதல், மலத்தைத் தடுத்தல், ஏற்றுக்கொண்டு வயிற்றின் கொப்புள் பகுதியுள் காற்று நுழைந்து இயங்காமல் இறுக்கம் தளரும்.

**வாயு உட்புகுந்து மலத்தொடர் அபாணத்தை**
**தேயுவைக் கூட்டித்திரட்டிக் கருக்கிடும்**
**கோயும், மலம் வரில் சுருக்குமன் நீண்டிடு**
**ஆயுமுனை போல்வான் இறுக்குமே. *(47)***

**உரை:** வயிற்றின் உள்ளே புகுந்த காற்று வெப்பத்துடன் சேரும். இதனால் வெளியேறும் மலம் கறுப்பான நிறமுள்ளதாக இருக்கும். சுருங்கி விரிந்து, மலத்தை வெளித்தள்ளும் அடிப் பகுதியின் நரம்புகள் நன்கு செயல்படாது. மலம் கெட்டியாக வெளிவரும்போது ஆசனவாய் பகுதியை உராய்ந்து கொண்டு வரும். இதனால் ஆசனவாயில் இரத்தக்கசிவு உண்டாகும். இறுக்கப்பட்டு, நாளடைவில் முளைகள் மலவாயிலில் தோன்றும். “மலபந்தமலாது” மூலம் வராது என்பது மருத்துவப் பழமொழி யாகும். மூலநோய் ஏற்பட மலக்கட்டே முதற் காரணமாகும். அபான வாயு சரிவர வெளித் தள்ளுவது பாதிக்கபட்டதால் இது உண்டாகும்.

இறுகும் சில மூலமேறர் மண்டபம் போல் மூல
மறுக்கும் பிராணங்கள் வருத்தம் சிலமூலம்
முறுக்கிய வாயுவால் உதிரத்தின் உறும்
கூ[illegible]ந்த
தறுகி, விழுந்தாட்டும் தான் இரத்தமூலமே.*(48)*

**உரை:** கெட்டியான அடிபகுதியானது சிறிய மாடியை ஒத்திருக்கும். அடியிலுள்ள சுழற்சி தடைப்பட்டு, துன்பம் தரும். வெளித்தள்ளும் வாயு மாறுபட்டு இருக்கும். இரத்தம் கலந்து மலம் வெளியாகும். குதத்தில், மலம் தடைபட்டு துன்பமுடன், கீழே விழும். இது இரத்த மூலமாகும்.

மூலம் எழுந்திடில்,முன்னே பசிபோகும்
மூலம் எழுந்திடில் முன்விந்து நாசம்
மூலம் எழுந்திடில் முழங்கும் இரைச்சல்தான்
மூலம் எழுந்திடில் முதியாக் கழிச்சலே. *(49)*

**உரை:** மூலநோய்க்கு முன்னதாகவே, செரியாமை நோய் உண்டாகும். ஆண்மையானது அழியும். மூல நோயுள்ளவர்களுக்கு ஒலியுடன் மலம் வெளியாகும். முற்றிய மூலநோயுடன் துணையாகக் கழிச்சல் வரும்.

கழிச்சல் கிராணி ஆறுவிதம் கேளு
அழிச்சிய பித்தவாதமுடன் ஐயமாம்
எழுச்சி வாயுதான் சேர்ந்து இதுமூன்றில்
பளிச்சென் பேதிக்கும் பாரீர் பலன்
போமே. *(50)*

**உரை:** கழிச்சல், கிராணி ஆகிய நோய்களின் இயல்புகளைக் கேட்கவும். இடையூறு செய்யும், பித்தம், வாதம், ஐயம் என்ற முக்குற்றங்கள், வாயு தோன்றி, மூவகைக் குற்றங்களுடன் உடலில் கலக்கும். உடலின் வலிமையை வணக்கத்திற்குரிய காற்று, பிரிக்கும் என்று அறிவியுங்கள்.

பலமான மேகத்தில் பிறந்தொரு பேதி
குலமான, மூலத்துக்கு கொடிய தொருபேதி
சலமான, வாத பாலத்தங்குமொரு பேதி
வலமான ஆறும் வகுத்தே உரைத்தேனே. *(51)*

**உரை:** வலிமையுள்ள ;மேக நோயினால் கழிச்சல் உண்டாகும். மூலநோயக் கூட்டத்துடன் வலிமையான கழிசசல் நோய் ஏற்படும். காற்றுடன், நிலம் என்பனவைகள் உள்ள பூதக்கூட்டால், கழிச்சல், நடுக்கல் நோயுண்டாகும். வலியைத்தரும் நிலையை வகைப் படுத்திச் சொன்னேன். (பெருங்கழிச்சல் நோய் 8 வகைப்படும் என்று யூகி முனிவர் கூறியுள்ளார். கிராணி என்பது நிணக்கழிச்சல் நோயாகும். இது 11 வகைப்படும்.)

உற்றகரத்துக்கு உறுதியாம் வாயுவுக்கும்
மற்றே வருமட்டு அன்னத்தைக் காட்டாதே
முற்றகலை, இராச்சுரமுன் வளியேபாரீர்
அவத்தே
நிறைந்தோடி உண்மையாய் வாழ்வேன். *(52)*

**உரை:** சுரத்துடன் வலிமை அதிகமான வாதநோயின் குற்றத்தை கொண்டு மற்றொன்றைத் தூண்டும். சரியான அளவு குறைத்து உடல் நன்நிலை வரும்வரை உணவை உண்ணக்கூடாது. மிகினும் குறையினும் நோயாம். மிகுந்த குற்றத்தைக் குறைத்தும் குறைந்த குற்றத்தைச் சமமாக்கியும் செய்தலை இங்கு விளக்கு கின்றார். முழுமையன காற்று இல்லாமல் சுரநோய் ஏற்படும். உறுதியாக காற்று ஓடிட உடல் இயல்பாக வாழும்.

வளமான பித்தத்தில் கபம்கூடி
தளமான வாயுவால்தானே வெதுப்பேறி
களமான கன்னத்தில் கட்டிய மூலமாம்
உளமாம் சுரத்தில் உறும் வாயுவே. *(53)*

**உரை:** பித்த குற்றமுடன் கபம் கூடிச் சேர்ந்தால் கனமான காற்று வெப்பமடையும். சுரநோய் ஏற்பட காற்றே காரணம் என்ற கருத்து உள்ளது. வெளிப்பகுதியில் வீக்கங்களும் மூலநோய் உண்டாகும். கபம் கூடி வெளியிடப் பகுதியில் வீக்கங்களும் மூலநோயும் உண்டாகும்.

**வாயுவினாலே மலசலந்தான் கூடும்**
**வாயுவினாலே வாங்கிடும் மேல்மூச்சு**
**வாயுவினாலே வளரும் விரணங்கள்**
**வாயுவினாலே வரும் உதிரரோகம். (54)**

**உரை:** காற்றின் செயலால் மலம், சிறுநீர் என்பன அதிகமாக வெளியேறும். ஆகாயத்தின் செயலால் காற்றை இழுத்தல் குறையும். புண்களான பிணிக்கூறு அதிகரிக்கும். காற்றினால் இரத்தம் பற்றிய நோய்கள் உண்டாகும்.

**ரோகங்கள் பற்றித் துளைந்தேறும் வாயுவால்தான்**
**வாகுத்த நெஞ்சில் வலித்தே மயக்கிடும்**
**போகும் பித்தத்தைப் போகாமல் தம்பிக்க**
**பாகொத்துப் பேசுகையில் பழிசெய்யும்**
**வாயுவே.(55)**

**உரை :** காற்று என்ற வாதம் உடலைப் பிடித்து, நோய்களை உண்டாக்கி, வருத்தமடையச் செய்யும். தோள், மார்பு ஆகிய இடங்களில் வலி, சோம்பல் என்பனவற்றை ஏற்படுத்தும். அதிகமாக உள்ள பித்த குற்றத்தை மாறுபடாமல் தடுக்கும். தீ வினையைச் செயல்படுத்தும் காற்று என சர்க்கரை போன்ற பேச்சை உடையவளே அறியவும்.

**வாயு அடங்கினால் வளமான தோசம் போம்**
**வாயு வெதும்பினால் மண்ணு நீரோண்**
**நோக்கும்**
**வாயுவினால் வழங்கிய வன்னி சாமி**
**வாயு ஆகாச மண்டலத் தோசையே. (56)**

**உரை :** காற்று தணிந்துவிட்டால் குற்றங்களான கேடுகள் விலகும். காற்று வெப்பமானால் நிலமும், நீரும் ஒன்றாக இருக்கும். காற்று, தீ ஒன்றாக இயங்க, உடல் மெலியும். காற்று நிலம் சேர, ஆகாயம் தோன்றக் காரணமான ஒலி எழும்.

**ஓசையினாலே ஊறவே, ஒளியினில் அஞ்சும்**
**நாசியில் மூன்றும் நாவினில் ஆண்டுத்தேகனும்**
**........தேவியூ தேனும் சேர்ந்து பிரிதிடம்**
**மாசிலா நந்தி மகிழ்ந்துரைத்தாரே. *(57)***

**உரை :** எவ்வகையான அழுக்கும் அற்றவரான நந்திபெருமான் எல்லோரும் இன்பமாக தத்துவம் அருளினார்கள். ஆகாயம் தன் மாத்திரையான ஒலி தோன்றக் காரணமானது. இவ்வொலியை உணர்ந்தால் அறிவு, ஐம்பொறி ஆகியவற்றை உணரலாம். ஆகாயமே எல்லா பூதங்களும் தோன்றக் காரணமாகும்.

**உரைத்தநாசிக்கு உறுதி குதிகேளு**
**விரைந்திட்ட பிங்கலை விடாது ஓடில்**
**மூன்றுநாள்**
**இரைத்தசடம், ஆண்டில் எய்திடும் ஆகாசம்**
**பாத்தியொண்டு நாளப்பா, வீரான**
**நாடென்னே. *(58)***

**உரை :** நாடியின் பயிற்சியைப் பற்றிய நன்மையைச் சொல்லுகின்றேன். இங்கு "நாசி" என்பது மூக்கு என்ற உறுப்பைக் குறிக்காமல், உயிர்வளி (பிராணவாயு)யைக் குறித்துள்ளது. சினையாகுபெயர். ஒலியுடன் வலது பக்கம் செல்லும். பிங்கலை நாடியில் தொடர்ச்சியாக இயங்கினால், மூன்று நாளில் உயிர் நீங்கும். பெருமையுள்ள ஆகாயப் பகுதியைச் சார்ந்து ஓராண்டுக் காலம் இயங்கினால் என்னது நீங்கும்?

என்றிலோர்நாள் இயங்கிடில் பிங்கலை
அன்றி மூவிரண்டு பலதப்பாது மாரணம்
ஒன்றியு பயத்தில் ஓடில் பத்துநாள்
மன்றி மதியாரிர் மரிப்பான் குறியிதே. *(59)*

**உரை:** நோயாளிக்குள்ள வாழ்நாள் பற்றிய குறிப்புகள் கூறப்படுகின்றன. நோயாளியின் மூச்சு, முன்சொன்ன பிங்கலை நாடியில் செல்ல, ஆறாம்நாள் இறப்பான தனியாக இயங்கினால் பத்துநாளில் இயற்கை எய்துவான். உறுதியாக அளவிட்டால் முழுமையான தீங்கை செய்யும் அடையாளம் எனலாம்.

குறிகோடு மூக்கன்றிக் குலவுவாய்
மறிகேளு மூன்றுநாள் மரித்திடுவான், தப்பாது
மற்றி நாளும் மலந்திரண்டு மிகக் குறைத்துவரில்
பதிவாகும் பசுத்தி பார் உயிர்தப்பாதே. *(60)*

**உரை:** தீங்கு செய்யும் அடையாளங்களைக் கேட்கவும். மூக்கில் வழியாகச் செல்லாமல் காற்று மேல்பக்கம் தங்க, மூன்று நாளில் தீங்குவரும். வேறுநாளில், மலம் கெட்டியாக குறைவாக வெளிவரும். குவியாகத் தீங்கு தீர்மானிக்கப்பட்டு உறுதியாக விளையும் என்று அறியவும்.

தப்பாது வாய்நீர்தான் நாக்கில் நவிமேல் மிகின்
ஒப்பாகத்தனு மறைந்த ஒளிந்திடுவான்
மதிஆறில்
செப்பாகத்தான் இருக்கச் சேர்ந்த சூழல்
அலைந்திடினும்
அப்பா கேள் சாவு..... அறிந்து கற்பம்
உண்டுவிடே. *(61)*

**உரை :** நாக்கில் உமிழ்நீர் அதிகம்; உடலின் வலது மூக்குத் துளையில் அதிகம் அறியப்படாமல், காற்று புள்ளியாக இருப்பது தீங்காகும். உடலின், இடுப்பு நிழல் அசைந்தால் தீங்கு வரும். இவ்வகையான அடையாளங்களை அறிந்து, உடலை வலுவாக்கும் கற்ப மருந்துகளை உண்ணவும்.

உறுதியாம் பித்த உடம்பு இளைத்து...........
பொறுதியாய் தூலித்தல் போல்வான் மதிஒன்றில்
உறுதியாம் ஐயம் மத்தி கொண்டு வற்றி
உற்றும் மதியில் ஒடுங்கும் சீவனே. *(62)*

**உரை :**வலிமையுள் முப்பிணிகளில் ஒன்றான பித்த உடலைக் கொண்டவன், இளைத்து காணப்படுவான். இதற்குமாறுபட்டு, உடல் பெருத்தாலும் நன்மையைக் கவனமாகப் பார்க்கவும். நடுப்பகுதி மெலிந்து காணப்பட்டால் ஒருமாதத்தில் தீங்குண்டாகும்.

சீவகளையின் செறிந்திடு நாடிதான்
காவல்கரம்பட்டான் உறுதிடில் மேலேறும் அதால்
தாவதம் என்லேதில் சாகான் ஒருநாளும்
பாவெத்துகீழ் நோக்கில்,பதையாமல் அவனே.*(63)*

**உரை :** உயிருக்கு அழகாகச் சேர்ந்து நாடியாகும். பாதுகாப்புடன் கையிலுள்ள வளைவு மேல் பகுதியில் நாடியின் துடிப்பு ஒலித்து, நன்மை செய்யும். இதை நிறுவினால், யாரும் எப்போதும் நிலைத்திருப்பார்கள். பாதுகாத்தலை தகுதியாகக் கையாண்டு கீழ்ப்பக்கம் நாடி பார்க்க, துடிக்காமல் நிறுவலாம்.

பதைக்கின்ற மூவரில் பக்குவம் தப்பியே
நிதைக்கின்ற வாதமும், பித்தமும் போய்விடில்
சுதைகொண்டிருந்தாலும் தோற்றில்
உயிர்போகும்
விதை கொண்டவாதம் பித்தம் பலன்பாரே.*(64)*

**உரை:** உறுதியான காற்று(வாதம்) தீ (பித்தம்) ஆகியவைகள் சேராமல், நாடியை நோக்க உயர்வான, அமுதம் உண்டாலும், தீங்கு விளையும். இது குறித்து, அறிவினால் காற்று, தீ ஆகியவற்றின் அறிகுறிகளை அறிந்துகொள்ளவும்.

பித்தம் அடங்கினால், பேசாமல் போய்விட
மத்தியில் ஐயம் எழும்பிடில் கிட்டாதே
பற்றிய வாதம் எழும்பில் மருந்து செய்
ஏற்றிய மூன்றில் இயல்பை அறிந்திடே. (65)

**உரை:** தீயின் பூதக் கூறான நடுவிலுள்ள் பித்தம் குறைந்தால், எவ்வகையான மருத்துவமும் பயன்தராது. மணி, மந்திரம், மருந்து என மூன்று வகைப்படும் என்பதாக மருத்துவ நூல்கள் கூறுகின்றன. கபநாடியை அணுக, அறிய முடியாது. வாத நாடி துடித்தால் மருத்துவம் செய்யவும். நாடிகளின் தன்மைகளை தெளிந்து அறியவும்.

அறிந்திடு மூவிரல் அடங்கியே மூட்டி
எறிந்து மிகஓடி எய்யாது சாவுதான்
பறிந்து நலத்தாது பற்றற்று கீழ்நோக்கில்
மறிந்தே உயிர்சென்று மறலியைத்
தாக்கிடுமே. (66)

**உரை:** மூன்று விரல்களை கையில் பொருத்தி, நோயாளிகளின் கைகளைப்பற்றி, நாடி பார்க்கவும். ஆய்வு செய்த நாடியைக் காண அதிகம் மூச்சு விடாமலிருப்பது தீங்கு எனலாம். நாடியில் உடல் நலம் காண விரும்பினால் குற்றம் தீங்கு நேராது. நாடி நன்றாக இருந்தால் உயிர், கூற்றுவனையும் எதிர்த்துப் போராடும்.

தாது முறைகேள் தனித்தகுதி சந்து
ஓதுறு காலிலும் உந்திநெடு மார்பு
காது நெடுமூக்கு கண்டம் கரமிரண்டும்
போது புருவமையம் புகழ் பத்தும்
பார்த்திடே.(67)

**உரை :** நாடியை அறிந்து கொள்ளும் வழியைக் கேட்கவும். மேன்மையாக உடலில் உள்ள பத்துவகை உறுப்புகளில் நாடியைக் காணலாம். ஒப்பற்ற குதிகால் பொருத்து, பாதங்கள், தொப்புள், மார்பு, காது, நீண்ட மூக்கு, கைகள், ஆண்குறி, கழுத்து, உச்சிக்குழி என்பன பத்து உறுப்புக்களாகும்.

*பார்க்கில் திசைநாடிப் பதைத்துக் கூறாய்*
*நின்றிடில்*
*ஏற்கிற சிலநாள் இருப்பான் இறந்திடான்*
*அருளிய சுழித்தோடில் ஆக்கிய மனக்கோட்டம்*
*அடைவான் இது உண்மையே. (68)*

**உரை :** பத்து நாடிகளில் உள்ள துடிப்பானது, பகுதியாகத் தடைப்பட்டால் சிலநாள் உயிர் வாழ்வான். சுழன்று சிறிது சிறிதாகக் கொண்டு போய் குலைக்கும். உள்ளத்தை வளைத்து மாறுபடச் செய்யும் இயல்புள்ளது. சித்தர்கள் கருணையுடன் விளக்கினார்கள்.

*உண்மைகேள் பின்னுழ இயந்திட தோயுள்ளான்*
*தன்மையாம் தூரப்போய் தாக்கிடில் உறவில்*
*கண் மையாம், வாயுக்கள் அன்றிடி கட்டுறும்*
*வன்மையாய் பார்த்து வகுத்தனர் நந்தியே. (69)*

**உரை :** நந்தீசர் பல மருத்துவ நூல்களின் கருத்துக்களை அறிந்து, அவற்றை நூலாகச் செய்தார். அவர் கூறிய இயல்பான மருத்துவக் கருத்துகளையும், நோயாளியின் கருத்துக்களை கேட்டறியவும், நாடிகள் மாறுதலுடன் கனமாக இயங்கினால், அவனுக்குத் தீங்குவராது. அழகான மனிதப் பிறவியில் பத்து வகையான காற்று அதிகமாக அவனுடைய வாழ்நாள் உறுதியாக நீடிக்கும் மனிதப்பிறவியின் சிறப்பை உணர்ந்தே மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே என்றார் அப்பர்.

*வகுத்தமுறைப்பாடு, மந்திரத்தால் வாயுவாம்*
*மகுத்த அனல் வாயுவால் வளர்ந்திடும்*
*நோயெல்லாம்*
*பகுத்தஇது இரண்டால் பாராய் சுரமுறும்*
*மிகுத்தஇது மூன்றாய் முத்தோசம்*
*காணுமே. (70)*

**உரை:** செரியாமை காற்றால் உண்டாகும். பெருமை படைத்த மருத்துவ நூல்களில் காற்றின் தன்மை

கூறப்பட்டுள்ளது. காற்றால் நோய்கள் அதிகமாகும். தெளிவாகக் கூறினால் மேற்சொன்ன காற்ற, தீ இவற்றால் "சுரநோய்" ஏற்படும். பித்தம் என்ற தீ, "வாதம்" என்ற காற்றுடன் சேர சுரம், சன்னி என்பன ஏற்படும்.

**காணுமே மந்தங்கள் பலிக்கும் அன்னத்தால்**
**காணுமே மந்தம் கடுமாங்கீசம் மீறில்**
**காணுமே மந்தங் கலந்த மாப்பண்டத்தால்**
**காணுமே மந்தம்கடு மேதிப் பாலுக்கே. *(71)***

**உரை :** ஆய்வு செய்தால், உணவால் செரியாத தன்மைகள் அதிகமாகும். அதிக புலால் உணவு, மாவுப் பொருள் அடங்கிய உணவு வெறுக்கப்படும். கடைந்த எருமைத்தயிர் என்பன உண்ணச் சோம்பல் உண்டாகும்.

**மேவிய அன்னத்தால் விளங்கிய அதிசடம்**
**பாவயளகொண்டு பழியுறு அன்னந் தானும்**
**மாவில் பிறந்தது மெய்யுறு நோயாகும்**
**காவில் இதை யெல்லாம் கண்டுகொள்ள**
**அன்னமே. *(72)***

**உரை :** உடலால் விரும்பபட்ட மிகுதியான உணவைப் பொருந்தி உண்ண தீங்கை ஏற்படுத்தும். நெருங்கிய உணவால் அதிகமான குற்றம் ஏற்படும். கரு தோன்றும் காலம் முதலே தொப்புள் கொடியுடன் நோய்கள் உண்டாகும். அன்னம் போன்ற நடையுடைய உடைய பெண்ணே, இக்கருத்துகளை அறிந்து கொண்டு, உடலைக் காத்துக் கொள்ள வேண்டும். இதில் உணவாதி செயல்களும், மனிதனின் இச்சாதி செயல்களும் கூறப்படுகின்றன. நோய்கள் ஏற்பட இவை காரணங்களாகும்.

**அன்னம் பிறந்தல்லால் விதையிலும்..........**
**அன்னமும் வெட்டை மகாசீதம் ஆட்டியாம்**
**பன்ன அறிந்ததை பார்ப்பார் பெரியோர்கள்**
**கன்னி மயக்கத்தால் கண்டிடு மேகமே. *(73)***

**உரை :** உணவாகப் பயன்படும் அனைத்தும், தாவரங்களாலே ஏற்படும். மென்மையான நடையைக் கொண்ட பெண்ணே. பெருங்கழிச்சல், வெட்டை மேகம் போன்றவைகளை, மருத்துவ வல்லுநர்கள் ஆய்ந்தறிவார்கள். இளமையில் ஏற்பட்ட பாலியல் விருப்பத்தினால் கிரந்தி, பரங்கி நோய்கள் தோன்றும். இன்று இவை எஸ். டி. டி. எனப்படும் எய்ட்ஸ் எனப்படும். ஏமக் குறைவுக்கு அடிப்படை பால்வினை தொடர்பாகும். எனவேதான் "கன்னி மயக்கம்" என்றார்.

**மேகம் பிறந்தவிதம் சொன்னார் என்நந்தி**
**பாகமிளந்தை பருவத்தனு மோகம்**
**யோகம் தினம் செய்து புகழ் தந்தே**
**வாகப்பதினில் வாங்கம் கையோகமே. *(74)***

**உரை :** என்னுடைய ஆசிரியரான நந்திபெருமான், மேக நோய்கள் தோன்றிய வழிகளைக் கூறினார். இளமைக்காலப் பெண்ணின் பங்கு நாள்தோறும் அருஞ்செயலை வெற்றியடைந்த, கணவனைத் தழுவிக்கொள்ளும் சேர்க்கையாகும்.

**கிரந்தி விரணங்கள் கேளிர் கீழ் மேமுமிந்த**
**இரண்டாம் உறுவாயு சூலையாம்**
**பரந்திது மூன்றால் பலபல மேகங்கள்**
**துரந்தே இதை தொட்டுச் சொல்லு**
**முறைகேள். *(75)***

**சையோகம் செய்யில் தனித்த சுழியோடும்**
**அய்யா அமிர்த அடங்கிக் கனலேறும்**
**மெய்யாக வீதியில் விழப் புண்ணாகும்**
**மையான மேகம் வளரும் கிரந்தியே. *(76)***

**உரை :** *(75, 76)* பெண்களுடன் சேரும்போது ஒரு நாடி மட்டும், மிகுதியாகச் சுற்றும், வெப்பம் அதிகமாகி உயிர்நிலை தளரும். வரிசையாக உடல் முழுவதும் துன்பம் ஏற்படும். குற்றமுள்ள கிரந்தி, மேகம் என்பன அதிகமாகும்.

கிரந்தி நோயால் ஏற்பட்ட புண்கள், சீழ்மேகம் போன்ற பாலியல் நோய்கள் பற்றிக் கூறுகிறேன். கேட்கவும். அதிகமான வாயு சூலை என இரண்டு வகைகளாகும். மூவகையன குற்ற வேறுபாடுகளால் மேகநோய்கள், உடலில் சுமையாகத் தீண்டும். இவைகளைத் தன்மையாகக் கூறுகின்றேன். செவிமடுத்து அறிந்து கொள்ளவும்.

**முறையான மேகமும், முழங்கு இருபது**
**துறையான எல்லாம், சொன்னாரே என் நந்தி**
**கறையாகும் சீலையில் கறி மஞ்சள் போலாகும்**
**பறையான பித்தத்தால் படுகின்ற மேகம். *(77)***

**உரை :** ஒலிக்கும் மேகநோய்கள் 20 என்றும் அவற்றின் தன்மைகள் அனைத்தையும் நந்தி பெருமான் கூறினார். பித்தமேகம், அழிவைத் தரும். நோயாளிகளின் ஆடையில் மஞ்சள் வண்ணம், அழுக்கு போலப் படியும், எண்வகை தேர்வில் நிறம்கொண்டு அறியும் முறை உள்ளது. ஈரல் கெட்டால் மஞ்சள் நிறம் உண்டாகும். இது போன்றே பித்தமேகம் உள்ளது.

**படுகின்ற சீலைதான் பாங்காய் வெளுப்பாகில்**
**அடுகின்ற வாதத்தால் ஆங்காணிது மேகம்**
**மடுகும் கபீனத்தில் மயிலைநிறம்**
**போலப்பட்டால்**
**விடுகின்ற சேத்துமத்தால் விழுகின்ற மேகமே.*(78)***

**உரை :** உடலில் அணிந்துள்ள ஆடையில் வெள்ளை நிறத்தன்மையானால் அது வாதக் குற்றத்தால் உண்டான வருத்தமடையச் செய்யும் மேகம் என்று அறியவும். கறுப்பு கலந்துள்ள வெள்ளை நிறமானால் கபத்தால் உண்டானது. இப்பாடலும் நிறம் கண்டு நோயறிதலைக் கூறுகின்றது.

**மேகம் இது மூன்றில் வெவ்வேறு குணம்கேளு**
**வாகிய பித்தமும் வாதமும் சேர்த்திடில்**
**தாகிய நாளில் அதமரில் எரித்தோறும்**
**போகிய நீர்க்கட்டும் பொதிந்து துளிவிழுமே.*(79)***

**உரை :** மூன்றுவகையான மேகங்களின் இயல்புகளைக் கேட்கவும். பித்தம், வாதம் சேர்ந்திருக்கும்போது நீர் வேட்கை துளைகளில் எரிச்சல் சேமிக்கப்பட்ட நீர் தடைபட்டு சிறிது சிறிதாக வெளியேறுதல் என்பன உண்டாகும்.

**விழும்சில நேரம் விடுபட்டு நீரோடும்**
**ஒழுகிய வாயுவோ ஒதுங்கினால் நோகாது**
**விழுகிய மந்தத்தால் வாயு வந்தேபுகும்**
**கழுவாய் உலர்ந்திடும் காலெரிப்பாகுமே. *(80)***

**உரை :** சில நேரங்களில் தடைப்பட்ட சிறுநீர், நன்கு வெளியாகும். ஓடுகின்ற (அபானவாயு) விலகினால், சிறுநீர்ப் புழையில் வலி இராது. வாயுவின செய்கையால் செரியாமை ஏற்படும். காலின் அடிப்பகுதிகளில் எரிச்சல், வரண்டு போதல் ஆகியவைகளுக்கு சுற்றும் காற்று இடமளிக்கும். இதில் நீர்த்தடை நோய் பற்றி வருகின்றது. முதுமையில் நீர்த் தாரையில் அடைப்பு ஏற்படும். மேலும் சிறுநீர்ப்பாதையில் சதை அடைப்பு, வளர்ச்சி என்பனவற்றாலும் சிறுநீர்த்தடை உண்டாகும்.

**ஆகிய வாதமும் வாயும் கட்டினால்**
**தாகிய வெள்ளைதடையது மெத்தவாம்**
**போகிய மேனிப் பொருமிக்கக் கறுப்பேறும்**
**வாகியதாது வழங்காது நட்டமே. *(81)***

**உரை :** நோயின் பிணிக்கூறான காற்று செலுத்தப் பட்டால், நீரவேட்கை தடுப்பில்லாமல் மேகநோய் அதிகமாகும். இன்பம் அடைந்தவன் உடலில் அதிகமாகக் கறுப்புநிறம் பரவும். பிறப்புறுப்பு இயங்காமல் இழப்பைத் தரும். மேகநோயால் பிறப்புறுகள் சேதமடையும். எனவே மகப்பேறு இன்பம் துய்த்தல் போன்ற செயல்கள் செம்மையாகி அமையாது. "தாது" என்பது இங்கு விந்துவைக் குறிக்காமல், பிறப்புறுப்பைக் குறிக்கும். கரு வளராமல் தொடர்ந்து கருச்சிதைவு உண்டாதல் (Habitual Abortion) என்பர்.

வழங்கிய வையமும் வாயுவும் கூடினால்
பிழங்கிப் பொசியாது பிறவெள்ளை காணாது
கழங்கிலை சத்தணல் தீபோலாவான்
விளங்கிப் புகைந்தோடி இருமிடும் பித்தமே.*(82)*

**உரை :** கபமும், காற்றும் சேர்ந்து இயங்க அதிக வெள்ளைக் கசிவு தவறாமல் வெளிவரும் தீமையாகும். கழற்சியின் பூவிதழ் போன்று சிவப்பாக இருப்பான். புல்லறிவு தோன்றாமல் அறிவுடன் பித்தம் என்ற குற்றம், இருமல் நோயுடன் வருத்தத்தைத் தரும் என்பதை தெளிவாக அறியலாம்.

இருமிய பித்தமும் வாதமும் கூடினால்
மருவுசில மேகம் வாருதி போலாகும்
உருவத்தைத் தாபிக்கும் முண்டுட அனல்
காத்திடும்
முருவத்து ஊனோடு உறுஞ்சி இனிக்குமே.*(83)*

**உரை :** தீ குற்றம், காற்று குற்றம் என்பன சேர்ந்தால், இருமல் நோயும், சிலவகையான மேக நோய்களும் கடலைப்போல, அதிகமாகும். உண்ணும் உணவு உடலை வளர்க்கும். வெப்பம் ஒளிரும் மடிப்புள்ள தசையோடு மகிழ்ச்சியையும் உள்ளே இழுக்கும்.

இனிக்கின்ற வாதத்திலிடைச் சேரில் நல்லயம்
பனிக்கின்றகள் பதநீர்போல நீரோடும்
கனிக்கின்ற கரம்தளரவே வெறுப்பேறும்
தனிக்கு மதுமேகம் தப்பாது ஐயமே. *(84)*

**உரை :** மகிழ்ச்சியான காற்றுடன் கபம் அளவுடன் கலந்தால் உடலை நடுங்கச்செய்யும் கள், பதநீர் போல சிறுநீர் வெளியாகும். அன்னசாரத்தால் உண்டான உடல் இளைக்கும். இரத்தம் குறைந்து வெளுப்புநோய் என்ற "பாண்டு" நோய் நோய் ஏற்படும். ஐயமேகம் தவறாமல் வரும். இதில் சிறுநீரைச் சோதிக்கும் முறை கூறப்பட்டுள்ளது. நீரின் மூலம் நோய்களை அறிந்தார்கள்.

ஐயமும் பித்தமும் அணைந்திடும் காலத்தில்
கொய்யுமாறு மாற்ம் கொப்பளிக்கும் தண்டில்
மையுறுகாண்ணோர்க்கு மகத்தான பெரும்பாடு
வெய்யுறு மேகம் வரிசை முறை கேளே. *(85)*

**உரை :** கபக் குற்றமும், பித்த குற்றமும் ஒன்றாக இருக்கும். ஆண்குறியில் அதிகக் கசிவு சொல்லும்படி உமிழும். மை தீட்டிய பெண்களுக்கு "பெரும்பாடு" என்ற நோயில் இரத்தம் அதிகமாக வெளியாகும். மேகநோய்களைப் பற்றி, தனித்தனி விரைவாகக் கூறுகின்றேன் கேட்கவும்.

முறை கேட்கில் ஒன்பது முயச்சியால் வந்தது
துறைகேட்கில் கர்ப்பத்துலங்கிய மேகம் கேள்
நறைபூத்த கொங்கையா நாயகன் மேகத்தால்
மறையொத்த கர்ப்பத்தில் வளர்ந்திடு மேகமே.*(86)*

**உரை :** தெளிவாகக் கூறினால் ஒன்பது வகையான சுவைகள் மேன்மையாக ஏற்பட்டது. மகப்பேற்றின் போது உண்டான மேக நோயின் இடம் பற்றிக் கேட்கவும். மணமுள்ள (மலர் சூடிய) பெண்ணின் மார்புக்கு உரிய தலைவனால் மேகநோய் கருவில் இரகசியமாகத் தோன்றும். ஆண்களால் பெண்களுக்குக் கருவிலேயே மேகநோய் ஏற்படும். இக்கொடிய நோய் தொடர்ந்து பல தலை முறைகளைத் தாக்கும்.

வளர்ந்த கர்ப்பத்தில் வகுத்த முறை அஞ்சு
உளந்திய உந்தியுள் அத்தியா மேகம்
உளந்திட ப்படும் வெள்ளை ஆகாச சுரமேகம்
தளர்ந்திய அத்தியைத் தழவே என்புருகியவை. *(87)*

**உரை :** பயம் ஏற்படும்படி கரு உண்டாகி வளரும் காலமுதல் மேகநோய்களை வகைப்படுத்தினார்கள். பரப்பப்படும், அத்தி மேகம், உந்தி மேகம்,மனம் கலங்காத நிலையுள்ள வெள்ளை மேகம், பயன்படாத அரமேகம், சிறுமை பொருந்திய எலும்பு மேகம், உருக்கிப் பாதியாக மாற்றும். இவ்வாறு மேகம் ஐந்துவகையாகக் கூறினார்கள்.

**தலைதாய் மேகம் தண்ணீர் பகைமேகம்**
**உண்கால் முழுக்கால் உருகுகுஞ்சிமேகம்**
**பிணங்காலம் பசிகேட்டால்பேராம்**
**பெருமேகம்**
**வணக்கான கையோகத்தை வறிசினமேகம்.*(88)***

**உரை :** கனிந்த தீயை ஒத்தமேகநோய், குளிர்ச்சியான மாறுபட்ட மேகம், புசிக்கும் பொழுது, முழுமையாக உள்ள பொழுது மெலிய வைக்கும் குஞ்சி மேகம், நெருங்கும்பொழுது, உணவு வேட்கைக்கு ஆளான பெரிய மேகம், பயனாகும் கலவி இன்பம் தரும் விச்சின மேகம்.

**கடு விழிந்திடில் காணும் சிலமேகம் பாரு**
**படு அத்தபாசாணத்தால் பலிக்கும் சிலமேகம்**
**மடு உந்த தேழும், முன் ஒன்பதும்**
**மடுவு இரு பத்தொன்றே ஏத்தினார்**
**மேகமே.*(89)***

**உரை :** வெறுப்புக்குரிய சில மேகநோய்களில் வெள்ளைக் கசிவு ஏற்படுவதைக் காணலாம். கொடிய சிவந்த பாசாண வகை மருந்துகளால் சிலவகை மேகங்கள் தீரும். நீர்நிலை, பழைமையான மேகவலைகள், தீங்கைச் செலுத்தும். *7, 9* ஆகியவற்றுடன் *21* ஆகும் என்று கூறினார்கள்.

**ஏற்றியகுணம் எழுந்த விதங்களும்**
**மாற்றிய பித்தமும் வாயுவும் ஒன்றாகில்**
**மாற்றிய என்னுருகில் வலியேதி**
**ஏறி வாய்நீர்ஊறி வாந்தியாம் பாருமே. *(90)***

**உரை :** உயர்ந்த தன்மைகள், செல்களும் தோன்றியது அறியவும். வேற்றுமையை உடைய தீயும், வாயுவும் கலந்திட நோயாகும். தக்கபடி வாயில், உமிழ்நீர் பெருகி வாந்தி எடுப்பதைக் காணலாம்.

பாருமே வாதமும் பித்தமும் பரிசிக்கில்
ஒருமே கும்பியில் புகுந்து மிகநோகும்
கூறுமே குத்தும் குடலை முறுக்கிடும்
வாருமே வாதத்தில் வளரும் குன்மமே. *(91)*

**உரை :** காற்றும் தீயும் ஒன்றாகக் குடலில் நுழைந்திட அதிகமான வலியைத் தருவதைக் காணலாம். குடலைத் திருகும். தாக்கும். வாதக் குற்றத்தால் மேலோங்கும். குன்மநோய் எனத் தொகுக்கலாம்.

வாங்கிய ஐயமுடன் வாயு ஒன்றாகில்
தழங்கிய அன்னத்தைச் சாதிக்க ஒட்டாது
புழங்கிய அன்னம் பிரம் புக்கிலாகும்தேறி
உழங்கி முறுக்கேறி உயிரை வலிக்குமே. *(92)*

**உரை :** கபமுடன், காற்றுச் சேர்ந்து கொள்ள உணவை ஏற்றுக்கொள்ளாது.ஒலி எழுப்பி, உடலில் உணவைச் செல்லவிடாது. விருப்பமுடன் கையாளப்பட்ட உணவை தெளிவாக அளவுடன் பயன்படுததுதல் வேண்டும். குடலைத் திருகி, உடலுக்கு வருத்தத்தைத் தரும்.

வலிக்கிய மேகமும் வாயுவும் ஒன்றானால்
பலரு மலசலம் பதையாமல் கட்டிடும்
மிலுகுழிட் பிற இயல்பாம் வ(பி)லிப்பிற
வலுரும் உருகுவர் சூலை குன்மமே. *(93)*

**உரை :** ஆற்றல் கொண்ட மேகநோயில், காற்றும் சேர்ந்தால், மலம், சிறுநீர் இயல்பாக இராது. கடினமாக மலம், சிறுநீர் வெளியேறுதல் சூலை, குன்மநோயால் உடல் இளைத்தல் வலிமை நீங்கும். பால்வினை நோயில் ஏற்படும் துணை நோய்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன.

குன்மம் இதுஎட்டும் ஆங்கே கூறினார் என்நந்தி
வன்மையாம் நோய் குன்மம் மகாநோய்
காண்போள் எர்கனமே செய்த கடர்வெய்து
நன்மையாம் செய் நடப்போர்க்கு நாடாதே. *(94)*

**உரை :** எட்டுவகையாக குன்ம நோய்களை நந்திதேவர் கூறினார். வலிமையுள்ள குன்மம், பெரியநோயாகும்.

நாட்டிய பித்தமாம் சூலைமுறை கேளு
ஒட்டிய அன்னம் அருசிகெட்டு வாந்தியாம்
மாட்டிய கைகால் திமிர்த்து புறம் தண்டு
நீட்டிவலித்து நிலமா எரியுமே. *(95)*

**உரை :** நிலைபெற்ற பித்த குற்றம், சூலை நோய் பற்றிய தன்மைகளைக் கேட்கவும். உணவில் சுவையின்மை. வாந்தி எடுத்தல் கைகால் இணைப்புகளில் உணர்ச்சி இல்லாமல் போதல், வலி உண்டாதல், முதுகுத் தண்டில் வலி, கைகால்களை இயக்கும் போது வலித்தல், தொடர்ந்து எரிச்சலைத்தரும்.

நிலமான வாதத்தில் நின்றிடும் சூலைதான்
சூலமா கைகால் குளச்செல்லாம் புண்போலே
கலமாய் வலித்துக் கனக்கும் கீழ்வயிற்றில்
விலமான மேனிதான் நின்று இளையாதே. *(96)*

**உரை :** பூமியான வாதம், சூலைநோயாக எப்போதும் இருக்கும். கை, கால் பொருத்துகளில் இரணங்களைப் போல வலியை உண்டாக்கும். உடலைப் பெருக்கச் செய்யும். துளையுள்ள உடல், எப்போதும் மெலியாமலிருக்கும்.

இளைத்திடும் மேனி இருமி வரண்டிடும்
குளைத்திடும் கைகால் குத்திமிக நோகும்
தளைத்திடும் மார்பில் சளி என்னும் தாக்கிடும்
மளைத்திடும் மெய்யாத்தால் ஆகாத
சூலையே. *(97)*

**உரை :** உடலின் எடையானது குறைந்து வற்றி மெலியும். இருமல் உண்டாகும். தொண்டையில் ஈரம் வற்றிக் காய்ந்து போகும். கை, கால்களின் குடைச்சலுடன் வேதனை ஏற்படும். பாசமுள்ள நெஞ்சில், கோழையானது உண்டாகும். கபகுற்றத்தால், சூலைநோய் ஏற்படும். தீங்கு விளைவிக்கும்.

ஆகாதவாதமும் பித்தமும் சூலையாய்
வாகான கைகால் வளமாய் கறுப்பேறும்
தாகாய் மேனிதனில் வெறும் புண்ணாகும்
போகாமல் நின்று புணர்ச்சியாய்க்
கொல்லுமே.*(98)*

**உரை :** நன்மை செய்யாத காற்றும், தீயும் சூலையை உண்டாக்கும். அழகுள்ள செழுமையான கைகால்களில் கறுப்பு நிறம் உண்டாகும். நன்மை செய்யாத வருத்தம் தரும். புண்களை உடலில் ஏற்படுத்தும். மருந்துகளால் நீங்காமல் நிலைத்துச் சேர்ந்து, கேடுகளைத் தோற்றுவிக்கும்.

கொல்லிய ஐயமும் பித்தமும் கூடினால்
வல்லி எலும்பில் வளமாய் துளைத்துநோய்
சளி சுரம் தகா இந்துடன் வியர்த்துவந்து
மேவி இருமல் இதுகாணும் சூலையே. *(99)*

**உரை :** பித்தம், ஐயம் இரண்டும் சேர்ந்தால் தீங்குண்டாகும். இளம்பெண்ணின் எலும்புகளில் செழிப்புடன் துளைசெய்து, வேதனையை அளிக்கும். சளி, சுரத்துடன் வியர்வை இருமலுடன் பொருந்தி சூலைநோய் தோன்றும்.

காணுமே ஐயத்தில் அகன்றுருகும் சூலைகேள்
பூணும் கபாலத்தில் புடைத்து வெடித்திடும்
மாணிய முளையாமல் அடங்கா குளிர்சுரம்
பேணிஎலும்பெல்லாம் பலன்கெட்டு
நோவாமே.*(100)*

**உரை :** கபக் குற்றமானது அதிகமாகி ருது சூலை உண்டாகும். நிலையைப் பற்றிக் கேட்கவும். தலையில் வீங்கி, உடையும். சிறிய கட்டிகள், தொடரும். நடுக்கு சுரம், எலும்புகளின் வலிமையை நீக்கும்.

ஆறுவகைச் சூலை மூன்றுபேர்க்குச் சொல்வார்
பேறு இதையல்லாமல் வெவ்வேறு அன்றில்லை
கூறு இதுவாம் வங்கொடிய குணம் சொல்வார்
பேறு மறுசூலை பெயர் சொன்னார்
நந்தியே.(101)

**உரை :** முக்குற்றத்தால் ஏற்படும். ஆறுவகையான சூலை நோயை விவரித்துக் கூறுவார். இப்பகுதியை கூறுவது அல்லாமல், வேறு செல்வம் எதுவுமில்லை. சூலை நோய் பற்றி அதனுடைய வலிமையான கொடிய இயல்புகளையும், நந்திபெருமான் மீண்டும் கூறுகின்றார்.

நந்தி உரைத்தது நலமான கர்ப்பத்தில்
அந்திய நோய்தான் அறுவகை கேளும்
புந்தியில் வாயுவும் தேயுவும் புகுந்திடில்
மந்தி மலடா வளமான வரைக் கென்னே. (102)

**உரை :** நந்திபெருமானின் நூலில் உள்ள மேகப்பேறு பற்றியவை ஆறுவகையானவைகள் ஆகும். கேட்கவும், வாயு, தீயும், கருப்பையில் சேர்ந்தால், மகப்பேறு அடையாமல் இருப்பாள்.

வரையான கர்ப்பத்தில் மலட்டுப்புழு புழுக்கில்
விரையான சுக்கிலம் தரைந்தது உண்டிடும்
கரை மலடாவள் காணிது போக்கினால்
துரையான பிள்ளைதான் சுகமான
செனிக்குமே. (103)

**உரை :** கருப்பையின் எல்லையில் மலட்டு நோயை உண்டாக்கும் புழு இருந்தால் விந்துவைச் செயல்படாமல் செய்யும். அழிக்கும் மலட்டு நோயைக் கண்டறிந்த நீக்க, விரைவில் குழந்தை இன்பமுடன் பிறக்கும். கர்ப்ப வாகடம் என்னும் தலைப்புக் கேற்ப நோய்களைப் பற்றி விளக்கத்தைத் தருகின்றார். ஆண் மலடே இல்லாமல் பெண் மலடு உண்டோ? என்று சில்லரைக் கோவையில் அகத்தியர் கர்ப்பகோளம் 16இல் உள்ளது.

செனிக்கின்ற பிள்ளைத் திறமாகப் பிறக்கையில்
கனிக்கின்ற நீர்கலந்துள்ளே சிக்கிடில்
பனிக்கின்ற கைகால் பாடியே குத்திடும்
தன்றாம் பசிபோகும் தன்வயிறு மாரிப்பே.(104)

**உரை :** மகப்பேறு நன்றாகப் பிறக்கும். சாரமானது சீழுடன், ஊன்நீர் சேரத் தடையுண்டாகும். நடுக்கமுடன் கைகால்களில் பரவி, வேதனையைத் தரும் பசி ஏற்படாமல், வயிறு பெரியதாக இருக்கும். மகப்பேற்றின் போது ஏற்படும் தடைகளைப் பற்றி எடுத்துரைக்கின்றார். மகப்பேற்றின்போது உடல் வீக்கம் பொதுவாக ஏற்படும். எனவே சிறுநீரில் (அல்புமின்-உப்பு) என்பது உள்ளதா? என்று ஆய்வு செய்வார்கள்.

பாரிய வாயுப் பரித்துக்குழி புகில்
தாரில் களித்துக் கதாநித்தம் கூப்பிடும்
வாரி உடம்பெல்லாம் வலிக்கும், இடைநோகும்
மாரியன் சொன்னார் அறிந்து புலசித்தரே. (105)

**உரை :** கனமான காற்று கருப்பையில் நுழைந்தால் உண்டாகும். விளைவுகளாவன. எப்போதும் நாள்தோறும் கொழுப்பு உடலில் வலி, இடுப்பில் நோதல் ஆகியவைகளை உயர்ந்த கருத்துக்களை அறிந்து கூறினார்கள்.

சித்தான கர்ப்பத்திலே சேர்ந்திடும் வாதத்தால்
மத்தாய் உருண்டும்வாயு பால் ஓடும்
ஒத்தே போகம் முன்னரே இரைந்திடும்
வற்றாத கழிச்சலாம் சூதகவாயுவே. (106)

**உரை :** அறிவுள்ள பெண்ணின் கருப்பையில் காற்று சேரும். கடைந்து சுழன்று காற்றால் நகரும். மிகுந்து, பசியை நீக்கி வயிற்றில் ஒலியை எழுப்பும். நீங்காத கழிச்சல் நோயாகி சூதகவாயு வேதனையைக் கொடுக்கும்.

சூதான மாங்கிசம் சுழித்திடும் கர்ப்பத்தில்
வாதான மேகத்தால் வாங்கி செனிப்பிக்கும்

போதஉடம்பெல்லாம் புண்போல மிகநோகும்
மீதான கர்ப்பமானீர் சீவனாமே. (107)

**உரை :** இறைச்சி (மாமிசம்) மகப்பேற்றின் போது சுற்றச் செய்யும்; பனிக்குட நீரை இழுத்து மகப்பேற்றை உண்டாக்கும். இரணம்போல வலிக்கும். தகுதியில்லாத மகப்பேறு, உயிராகும்.

ஆகின்ற ஆறுவகை நோய்தான் கர்ப்பத்தில்
பாகத்து நிற்கில் பலியாது கர்ப்பந்தான்
வாரென்றி
வாகின்ற போக்கானால் மலடிபெறும் பிள்ளை
ஆகின்ற நேரமறிந்து முறை பாரே. (108)

**உரை:** மகப்பேற்றின்போது ஏற்படுவது ஆறுவகையான நோய்கள் வரும் என அறியவும். நோய்கள் இருந்தால் குழந்தை பிறக்காது. ஆக்கப்பட்ட பெண்ணின் கருவில் ஏற்பட்ட நோய்களை விலக்க, கரு முழுமையாக வளர்ந்து, மகப்பேறு ஏற்படும். மலடி என்ற பெயர் நீங்கும். திறமையுள்ள மகப்பேறு மருத்துவர்களை அறிந்து நோய்களைத் தீர்க்கும் வழியைக் காணவும்.

பார்போடிச் சுட்டால் பருவெய்யில்
வாரேறு கொங்கையான் மாய்கைமிகச் செயலா
.................................. (109)

**குறிப்பு :** இப்பாடல் திருமந்திரம் வைத்தியத்தில் பாடல் எண்115ஆக உள்ளது.

கண்ணோய் வருகின்ற காரணம் பின்னேகேள்
பண்ணான் பருவெட்டை வாயுவுடன்..........
தண்ணாமல் மலக்கட்டில் தசை மலம்
கட்டினால்
பன்னவித அண்ணாத்தில் பொடிகின்ற
காரமே.(110)

**உரை :** கண்ணோய் தோன்றும் காரணம் அறியவும். பிரமேகம் வெட்டை போன்ற பாலியல் நோய்கள் அபான வாயுவால் ஏற்பட்ட மலக்கட்டு, வாயில் செலுத்தப்படும் கார மருந்துகளாலும் வரும் என அறியவும். இதில் கார மருந்துகளின் பக்க விளைவுகளைப் பற்றி எடுத்துரைக்கின்றார். கார மருந்துகளை உண்பதால் பார்வை நரம்புகள் பாதிக்கப்பட்டு அதனால் கண்ணோய் உண்டாகும். இன்றும் மருந்துகளால் பல பக்கம் விளைவுகள் ஏற்படுகின்றன. தேரையர் மருந்தால் விளையும் தீங்குகளைத் திறம்பட இயம்பியுள்ளார்.

**கார........கடுரெத்தும் அகத்தால்**
**நேரொத்த சாமம் நின்ற மூக்கின் வாசத்தால்**
**நோரொத்த பேதியால் பலப்பலத் தண்ணீரால்**
**சீரொத்த கண்ணில் சிறக்கும் வியாதியே. *(111)***

**உரை :** இரச, பாசாண மருந்துப் பொருள்களை வெப்பத்தால் கெட்டியாகச் செய்ய சுருக்குத் தரும்போது உண்டான புகை கண்ணில் படுவது, மூக்கின் மூலம் உள் செலுல்லுவது. கழிச்சல் நோய், மாசுள்ள தண்ணீரைக் குடிப்பது என்பன கண்ணோய்க்கு காரணங்களாம்.

**வியாதியுள் முவாறு விளங்கிய குட்டம்கேள்**
**சுயாதி கிரந்திகனல் மேகத்தால் ஆறு**
**பயாதிய மண்ணுணி பல்வண்டினால் எட்டும்**
**தியாதி புழுவினாலும் நிறைந்துறை**
**குட்டமே.*(112)***

**உரை :** தோல்நோய்கள் 18 என்று சித்த மருத்துவம் கூறும். கிரந்தி, மேகம் என்பனவற்றால் 6வகை நீர், மண் ஆகியவற்றிலுள்ள பல வகையான பூச்சிகள், வண்டுகளால் எட்டுவகையும், புழுவின் காரணமாக நான்குவகை தோல் நோய்களும் உண்டாகும். பாலியல் நோய்கள் கிரந்தி மேகத்துக்கு தோல் நோய்கள் துணை நோய்களாக வரும். கழிச்சல், வாந்தி, பேதி என்பன நீராலும் பரவும். "லூயி பாஸ்டர்" என்பவர் கிருமிகளால் நோய் ஏற்படுவதைக்

கண்டறிந்தார். அவருக்கு பன்னெடுங்காலம் முன்பே திருமூலர் இக்கருத்தைக் கொண்டிருந்தார்.

உரைத்த சுரம்போல உறவான தோசம் போம்
விரைத்திடு சன்னியும் மேலான வாயுபோம்
பயித்திய கர்ப்பத்தில் பகத்தாறு நோய் சூலை
துறந்த நல்சூதச் சூட்டிநீ பார்த்திடே. *(113)*

**உரை:** கர்ப்ப சூலை, உளக்கேடு, முப்பிணி என்ற சன்னி, சூலை, வாதநோய்கள், சுரம் சுரத்தின் வழியாக உண்டான குற்றங்கள் தீரும். தூய்மை செய்யப்பட்ட இரசத்தால் செய்யப்பட்ட மருந்துகளை உண்ண, நீ மருந்துகளைத் தயாரித்து, ஆய்வு செய்து பார்த்துத் தரவும்.

பார்த்திடும் மேகம் பயின்றுத தறுபதம்
போர்த்திடும் பூரகம் பொலிவான செந்தூரம்
கோர்த்திடும் சீந்திரு மட்டிடும் சர்க்கரை
மாற்றிடும் வெண்ணை மகாமேகம் போகுமே. *(114)*

**உரை :** மேகம் எனப்பட்டது 21 வகைகளாகும். அப்பிரகச் செந்தூரத்தை அழகாகச் செய்து, சீந்தில் சர்க்கரையுடன், வெண்ணெயில் தர, பெரிய மேக நோய்கள் தீரும். அப்பிரகம் என்பது உலோகமாகும். இதைப் புடமிட்டு செந்தூரமாகச் செய்து (இது இன்னும் வழக்கில் உள்ளது) மதுமேக நோய்க்கும், உயிரின நஞ்சுகளுக்கும் சித்த மருத்துவர்கள் வழங்குவார்கள்.

போகுமே குன்மம் புகட்டத் திராவகம்
போகுமே குட்டம் புகட்டச் சயகெந்தி
போகுமே கிராணி புகட்டநற் பூநாகம்
போகுமே மூலம் புகழ் தங்கச் செம்புக்கே. *(115)*

**உரை :** திராவகத்தால் வயிற்றுப் புண்ணும் தோல் நோய்கள், கந்தகம் சேர்ந்த மருந்துகளாலும் நாகம் சேர்ந்தவைளால் கடுப்புக் கழிச்சலும், தங்கம், செம்பு வகையிலான மருந்துகளால் மூல நோயும் தீரும்.

சங்கைகேள் நோய்தான் தனி நாலாயிரம்
சங்கைகேள் நானூற்று நாற்பத்தெட்டு
என்பார்கள்
சங்கைகேள் இத்தனை நோய்க்கெல்லாம்
சங்கைகேள் சந்திரோதயம் சா.........மே. *(116)*

**உரை :** எண்ணப்படும் நோய்கள் 4448 ஆகும். சந்தேகமில்லாமல் கேட்கவும். கனமான நோய்கள் யாவும், தூளாக ஆகும்.

பொடியான நோய் போகப் பூரண சந்திர
மடியான சூதம் மகத்தான தங்கம்
பிடிவான கெந்தி பேரான சத்து
யாகச் செந்தூரிக்கும் அடியே தின்றிட. *(117)*

**உரை :** நோய்கள் எல்லாம் தூளாகி நீங்க நந்தியம் பெருமான் கூறியுள்ளவை. இரசம், தங்கம் போன்றவைகளால் ஆன சித்த மருந்துகள், கந்தக சத்துள்ள மருந்துகளை செந்தூரமாக்கி உண்ணத் தரவும். இதனால் 4448 நோய்கள் விலகி, நல்வாழ்வு வாழலாம்.

தின்றிடும் நோயெல்லாம் திசைகெட்டு ஓடிடும்
பன்றிட வாயுவும் பதத்தில் சேராது
தன்றிட லோகர்க்கு தாளநாகச் செய்முறை
மன்னிய சித்தர்க்கு மகாவியாதி போமே. *(118)*

**உரை :** நான்கு திசைகளிலும் நோய்கள் விலகிச் செல்லும். காற்று அணுகாது சித்தர்கள் செய்து தரும் தாளகம் நாகத்தால் ஆன மருந்துகளை உண்பவர்களுக்குக் கொடிய நோய்கள் நீங்கும்.

நிறைவு

## 18 சித்தர் நாடி சாத்திரம், கர்ப்பவாகடம் பாடல் எண்கள்

| கர்ப்பவாகடம் பாடல்எண் | நாடி சாத்திரம் பாடல் எண் | கர்ப்பவாகடம் | நாடிசாத்திரம் பாடல்எண் |
|---|---|---|---|
| 1. | இல்லை | 30. | பாடல் 8 |
| 2. | இல்லை | 31. | ,, 19 |
| 3. | ,, | | |
| 4. | ,, | 32. | ,, 20 |
| 5. | ,, | | |
| 6. | ,, | 33. | ,, 21 |
| 7. | ,, | | |
| 8. | ,, | 34. | ,, 22 |
| 9. | ,, | 35. | ,, 23 |
| 10. | இல்லை | 36. | ,, 24 |
| 11. | ,, | 37. | ,, 25 |
| 12. | ,, | 39, | ,, 94 |
| 13. | ,, | 40 | ,, 95 |
| 14. | இல்லை | 41. | ,, 96 |
| 15. | பாடல் 2 | 42. | ,, 97 |
| 16. | ,, 3 | 43. | ,, 53 |
| 17. | ,, 4 | 44. | ,, 54 |
| 18. | ,, 5 | 45. | ,, 38 |
| 19. | ,, 6 | 46. | ,, 55 |
| 20. | ,, 7 | 47. | ,, 56 |
| 21. | ,, 8 | 48. | ,, 57 |
| 22. | ,, 9 | 49. | ,, 58 |
| 23. | ,, 10 | 50. | ,, 59 |
| 24. | ,, 11 | 51. | ,, 60 |
| 25. | ,, 13 | 52. | ,, 49 |
| 26. | ,, 14 | 53. | ,, 51 |
| 27. | ,, 15 | 54. | ,, 82 |
| 28. | ,, 16 | 55. | இல்லை |
| 29. | ,, 17 | 56. | இல்லை |

| | | |
|---|---|---|
| 57. | பாடல் | 27 |
| 58. | ,, | 28 |
| 59. | இப்பாடல்இல்லை | |
| 60. | பாடல் | 30 |
| 61. | ,, | 31 |
| 62. | ,, | 32 |
| 63. | ,, | 34 |
| 64. | ,, | 35 |
| 65. | ,, | 36 |
| 66. | ,, | 37 |
| 67. | ,, | 39 |
| 68. | ,, | 40 |
| 69. | ,, | 41 |
| 70. | ,, | 42 |
| 71. | ,, | 43 |
| 72. | ,, | 44 |
| 73. | ,, | 45 |
| 74. | ,, | 46 |
| 75. | ,, | 47 |
| 76. | ,, | 48 |
| 77. | ,, | 61 |
| 78. | ,, | 62 |
| 79. | ,, | 63 |
| 80. | ,, | 64 |
| 81. | ,, | 65 |
| 82. | ,, | 66 |
| 84. | ,, | 68 |
| 85. | ,, | 69 |
| 86. | ,, | 70 |
| 87. | பாடல் | 71 |
| 88. | ,, | 72 |
| 89. | ,, | 73 |
| 90. | ,, | 74 |
| 91. | ,, | 75 |
| 92. | ,, | 76 |
| 93. | ,, | 77 |
| 94. | ,, | 78 |
| 95. | பாடல் | 79 |
| 96. | ,, | 80 |
| 97. | ,, | 83 |
| 98. | ,, | 84 |
| 99. | ,, | 81 |
| 100. | ,, | 85 |
| 101 | ,, | 86 |
| 102 | ,, | 87 |
| 103. | ,, | 88 |
| 104. | ,, | 89 |
| 105. | ,, | 90 |
| 106. | ,, | 91 |
| 107. | ,, | 92 |
| 108. | ,, | -- |
| 109. | ,, | -- |
| 110. | ,, | 99 |
| 111. | ,, | 100 |
| 112. | ,, | 100 |

## பெண்களுக்குப் பிரசவ வைத்தியம்

*சு. எண். 299*

### பிள்ளை பெற மாட்டாத பேர்க்கு மருந்து

காயம், சுக்கு, இந்துப்பு - மூன்றையும் காடியில் அரைத்துக் கொடுக்க மகவும் கூட விழும்.

குன்றி அளவாகக் காடியில் அரைத்துக் கொடுக்க, விலகின பிள்ளையும் பிழைக்கும்.

நெருஞ்சிவேரைக் காடியில் பல்லை அரைத்து, உள்ளங்காலில் பூசப் பிள்ளையைப் பெறுவர். இல்லையென்றால், பன்றியிலை, விளக்கெண்ணையில் அரைத்துக் கொடுக்க பிள்ளை விழும்.

பொன்னூமத்தைக் காப்புக் கட்டி, ஒரு பலம் பிடுங்கி, இடது கால் பெருவிரலில் கட்டவும். பிள்ளை விழும். பிள்ளையின் செத்தை தெரிந்தால் (நஞ்சுக்கொடி) வேரை அவிழ்த்து விடவும்.

வயிற்றில் நஞ்சு வராமலிருந்தால், வீழியிலையை நன்றாக அவித்துப் பிழிந்து, அந்தச் சாற்றில் சுக்கு, மிளகு, கடுகு இவற்றை அரைக்கவும். சாற்றைக் காய்ச்சிக் கலக்கிக் கொடுக்கவும்.

சதை வளர்ச்சியை சலவை துணிச்சீலை கொண்டு பொதியவும். கழுத்தில் கட்டவும்.

## நாடி சாத்திர பாட வேறுபாடுகள்

பாடல்-8 1. தாளோடு 2. களத்திற்கு

பாடல்-9 1. துலக்கவே 2. மூன்றில் 3. பித்தது

பாடல்-10 1. தனித்த விரைவாதம், 2.மது,3. வழங்குமை 4.மோதுமுறை

பாடல்-11 1.குயத்தொடு, 2.இணைந்த, 3.குறியே

பாடல்-12 1.குறித், 2.மறியாம் தன் கீழே, 3.நடுவே அடைந்தது

பாடல்-13 1.வேகந்தான், 2.நரம்பே

பாடல்-14 1.பித்தந்தான் மாத்திரை ஒன்றாகில்,2.வாதம், 3.பிழங்கிய

பாடல்-15 1.எழில்நடை, 2.எல்லையே, 3.உழன்றது, 4.வல்லயே.

பாடல்-16 1.தலத்திலே, 2.பேராறு, 3.உறைந்திடும்.

பாடல்-17
**உறவாம் கறுப்புறும் சிவப்புறும நல்வாதம்**
**குறவா பச்சைப்பசுமைக் கொடும் பித்தம்**
**மேவான வெண்மையாய் நின்றது நல்ஐயம்**
**மறவான வண்ணைமாகும் தலமிதே.**

பாடல்-18 1.கால் வான வளர்ந்தே இருந்ததே

பாடல்-19 1.இருந்த விதம் சாவொடுத்த சடமேது.

பாடல்-20. 1.வெதுப்புற்று, 2.நதுபோந்து எல்லாம் கவனித்திடமிட்டு, 3.மதுபோந்து.

பாடல்-21 1.ஆறுங்கண்ணிலே, 2.அடங்கிடும், 3.பளப்பதல்

பாடல்-22 1.வன்னிப் பகர்ந்தது

பாடல்-23 1.வகிந்து, 2.போதிக்கும்

பாடல்-24 1.ஆண்மையை, 2.வாதமேரில், 3.குழைச்சு

| | |
|---|---|
| பாடல்-25 | 1.தண்ணு, 2.ஆசனம் ஊடே, 3.குளிர்ச்சி பகர்ந்திடும் |
| பாடல்-26 | 1.வாநீர் மிக ஊறும், 2.எரிபெறு, 3.தவளம் |
| பாடல்-27 தனிவிலா | 1.இளைப்பேரிடும், 2.தடங்கி இருமும், இரண்டு, 3.மனோ, 4.நீரடங்கி மெய். |
| பாடல்-28 | 1.மூவருக்கும் கான்று, 2.மொக்கிய |
| பாடல்-29 | 1. துளக்கிய, 2.வாயுவும் அப்புவும்,3.வளக்கிய |
| பாடல்-30 | 1.வன்னிக்கும் தேசமாம், 2.தணலோடி, 3.அயத்தால் சிவப்போதும் வாயுவே |
| பாடல்-31 | 1. எழும்பினால், 2.வாயுவும் நீரானால், 3.வன்னிசாம் |
| பாடல்-32 | 1. ஓசையில் எழும் ஒளியினால் ஓரைந்தும், 2.இரண்டும், 3.தேசியும், 4.உரைத்தானே |
| பாடல்-33 | 1.மூன்றுநாள், 2.இரண்டுநாள் பாயில் இரண்டென்ன |
| பாடல்-34 | 1.பிங்கலை, 2.தண்ணிய மூவாண்டில் தப்பா மரணமே, 3.உபயத்தில், 4.மண்ணில் மதிஆறில் |
| பாடல்-35 | 1.நாள் மூன்றில், 2.குறிகோளுமே,3.குறைந்துரில், 4.பறிக்கும் ஒரு பட்சத்தில் பார் உயிர் தப்பாதே |
| பாடல்-36 | 1.ஆவிமேலும், 2.மறைந்தால் ஒழிவான், 3.சாவான் அறிந்து |
| பாடல்-37 | 1.தண்டமும், 2.என்னும், 3.ஒன்றி நாள் ஆறில், 4.சாவெண்ணே. |
| பாடல்-38 | 1.இளைத்தேறில், 2.அலைத்துக்கொண்டே, 3.வந்தில் அறுதி அறுமதி ஏகும் காண். |
| பாடல்-39 | 1.அழுந்திடில், 2.தவேத்து, 3.பாவக்கீழ் |
| பாடல்-40 | 1.விதைக்கின்ற, 2.விட்டேகில், 3.பிதக்கொண்ட |

| | |
|---|---|
| *பாடல்-41* | *1.எழும்பினால், 2.வருந்திடில், 3.பொத்தி* |
| *பாடல்-42* | *1.மூவர் அடங்கியே, 2.மிக ஓடில் ஐயதாது சாவு தான், 3.பறிந்துத்த தாதுதான் பத்தத்துக் கீழ் நோக்கில், 4.மாளிகைப்புக்குமே.* |
| *பாடல்-43* | *1.உந்தி புகட்டு, 2.இதுதான், 3.உத்திகள், 4.தாதுவே* |
| *பாடல்-44* | *1.ஓதிய காமம், 2.போதுறு* |
| *பாடல்-45* | *1.பதைப்பண்டாய், 2.நின்றிடில், 3.ஏற்கில், 4.இருந்திடின்* |
| *பாடல்-46* | *1.பதைப்பண்டாய், 2.நின்றிடில், 3.ஏற்கில், 4.இருந்திடான், 5.காற்கிய காமியம் கழன்று, 6.வார்க்கில்* |
| *பாடல்-47* | *1.வருத்துநல், 2.முகுத்த, 3.மூன்றால்* |
| *பாடல்-49* | *1.வீரிய சடம், 2.மிகும் அப்பில் ஐயுற்று.* |
| *பாடல்-50* | *1.மன்னைய, 2.மகாத இரண்டினால்* |
| *பாடல்-51* | *1.யாக, 2.போகம் தினம் செய்யப்போய் மந்ததே கூடல், 3.பசியில் வழங்கும் சயரோகம்.* |
| *பாடல்-52* | *1.சயரோகம், 2.மெய்யாக, 3.மெய்யாக அவஸ்தி விழவிழப்புண்ணுக்கு* |
| *பாடல்-53* | *1.கேளிதிற், 2.முதிர்ந்திது, 3.அது, 4.தொட்டு நோயுற்றதே.* |
| *பாடல்-54* | *1.கனலா, 2.எற்றே, 3.ஒன்றும் அஞ்சாதே.* |
| *பாடல்-55* | *1.இப்பாடல் முன்சுவடியில் இல்லை* |

அஞ்சி உழத்தி அழியாமல் காயந்தான்
மிஞ்சிய கற்கம் விளம்பினோம் நூற்றெட்டு
தஞ்சமுறவேதான் தின்னவல்லார்க்கு
பஞ்சு நரைபோய் பதின்கோடி வாழ்வரே.

| | |
|---|---|
| *பாடல்-56* | *1.கூடில், 2.முளமாம்.* |

பாடல்-57 1.கட்டும், 2.ருத்திரரோகமே

பாடல்-58 1.கபத்தில் உழந்ததே, 2.போகுத்த, 3.பேசில்

பாடல்-59 1.குதமாகும், 2.அதமாகும் போகத் தணைந்திடில்

பாடல்-60 1.சுகத்தின், 2.சிவப்போடும், 3.சுகத்தில் மாய்ந்திடும் காயமே

பாடல்-61 1.பாயொத்த, 2.பாராது, 3.மாய்நது

பாடல்-62 1.புகுந்து, 2.மலத்தில், 3.நீண்டே, 4.இருக்குமே.

பாடல்-63 1.எழு, 2.விரணம் கொண்டுவரும் சீழ், 3.கிரந்தி இனம் கூட்டி, 4.காட்டுந்தான்.

பாடல்-64 1.முடுகும், 2.முனை

பாடல்-65 1.அறு, 2.மழுச்சிய பித்தத்தால் வாதத்தோடு அய்யம், 4.பலம்

பாடல்-66 1.மூலத்தில் கொடியதோர் பேதி, 2.வாயுவால் தாங்கி, 3.வகுத்த முறைப்பாரே.

பாடல்-67 1.காண, 2.ஆனா.

பாடல்-68 1.வெளுப்பேரில், 2.வாயுவால் தாங்கி, 3.வகுத்த முறைப்பாரே.

பாடல்-69 1.நாள், 2.போகில், 3.பொசிந்து.

பாடல்-70 1.பூதம், 2.கழுகி முதிர்ந்திடும்,3.கல்லெரிப்பாகுமே

பாடல்-71 1.கூடில், 2. பொறுகி.

பாடல்-72 1.அவையுடன், 2.பொசித்து, 3.தழங்கி இளைத் திடுந்தா அஸ்தி, 3.மிழங்கி, 4.மேகமே.

பாடல்-73 1.ஏமாய், 2.போல் ஓடும், 3.எனக் காத்திடும், 3.உருவத்தின் ஊடே உறுஞ்சு

பாடல்-74 1.மேனியில் காந்தி, 2. தனிக்கு

பாடல்-75 1.இளைத்திடும், கொய்யும் இரத்தமும், 3.கண்ணாள்

| | |
|---|---|
| பாடல்-76 | 1. அடங்கிய மேகங்கள் |
| பாடல்-77 | 1.உள் பித்தியாமேகம், 2.மளத்தீ, 3.ஆகாச் சுரமேகம் 4.தளந்திய அத்தி தணல் என்புருக்கிய |
| பாடல்-78 | 1.தண்டாய் காய்ந்திடு, 2.முணக்கால் மருக் கால் உரும் சில மேகந்தான், 3.வர்க் கடுமேகமே. |
| பாடல்-79 | 1.கடு அத்தி உண்டிடில், 2.மடுவற்ற பாசாணத் தால் சிலகேம், 3.எடு உற்றிரு. |
| பாடல்-80 | 1.குன்மம், 2.கேளு, 3.மோத்திய, 3.வன்ன மறிக்கில் வலிப்பேறின், 4.வாற்றிய நீக்கி |
| பாடல்-81 | 1.வாயுவும் வாதமும் பாணிக்கில், 2.உருண்டு, 3.கோருமே. |
| பாடல்-82 | 1.வழங்கியவை உள், 2.சந்திக்க, 3.பிடி புகில் குற்றேறி |
| பாடல்-83 | 1.ஒன்றானால், 2.பலுக்கும் சலமுறு, 3.பிற மேகம், 4.வலப்பிற, 5.மலுக்கு |
| பாடல்-84 | 1.நாவில் கூறினார் எண்விதம், 2.காணப் பொல்லாது, கன்மமே செய்தோர்க்கு, 3.நன்மைதான் செய்திடும் நாட்டோர்க்கு வாராதே. |
| பாடல்-85 | 1.மூட்டிய, 2.சந்து பின் தண்டு |
| பாடல்-86 | 1.கனத்திடும், 2.தலமான |
| பாடல்-87 | 1.குலைந்திடும். |
| பாடல்-88 | 1.கரட்டறும், 2.தாகானமேனி வெடிப்புண்டாகும் |
| பாடல்-89 | 1.மல்லிய, 2.அல்லி, 3.தனுவே, 4.மெல்லி. |
| பாடல்-90 | 1.கண்வந்த சூலை கேள், 2.பலம் கெடும். |
| பாடல்-91 | 1.சூலையாம் ஒன்று, மூன்று போ, 2.ஏறு, 3.இதநாமம் கோடி. |
| பாடல்-92 | 1.ஆறுவிதம், 2.புகுந்திடில், 3.வலமா வைரைக்கே. |
| பாடல்-93. | 1. கரையா. |
| பாடல்-94 | 1.நிறமாய், 2.பரவியே, 3.தனக்கு |

பாடல்-95 1.கழிந்து, 2. மாறியன.

பாடல்-96 1.இரத்தத்தால், 2.ஓடிடும், 3.பசிபோம் உழன்றே. 4.வற்றா.

பாடல்-97 1.போதாக உடம்பெல்லாம், 2.நீதா மயக்கமாம் நிர் சீவனுக்கே

பாடல்-98 1.ஆகின்றவாறு விதநோய், 2.பாகொன்றி நின்றார் பலியாது கர்ப்பந்தான், 3.வாகொன்றிப் போக்கி, மலடிபெறும் பிள்ளையா, 4.நோயாய்

பாடல்-99 1.சீயோடு, 2.மிகஓக்கும், 3.கிட்டும்.

பாடல்-100 1.பெண் தானும், 2.சேரும் அனுபம் சேர்காடி, 3.மாங்கனி, 4.கொண்டார்க்கு மட்டிடும்.

பாடல்-101 1.உண்டி, ருதுகாலம் மா தின்பாள் மோர் உண்பார் 3.அணைவாள், 4.சூதக்காய் தின்பாள், 4.உண்டியே பெண்களுக்கோர் எட்டும் சன்னியே

பாடல்-102 1.உழன்றது, 2.வாரெட்டான மேகந்தரம் சுக சன்னி, 3.பத்தால், 4.பாரெட்டு மெச்ச பகர்ந்த முறை பாரே

பாடல்-103 1.இன்னங்கேள், 2.பண்ணாமல், 3.தண்ணு மலக்கட்டால் தன் சலக்கட்டினால் புண்ணும் விரணத்தால் பொடி நற்காரமே.

பாடல்-104 **காரசுருக்கல் கடும்செ தூமத்தால்**
**நேரொத்த சாரம், நிறைமூக்கின் வாளத்தால்**
**பாரொத்தபேதி..............................**
**..................................கண்ணீர்**

பாடல்-105 1.சுபாதி, 2.நின்றிருந்த

பாடல்-106 இந்துப்பு திப்பிலி இது பீதரோகணி
ததிப்புச் சாற்றில் நயந்தே உரைத்திட
வந்தகன் கண்ணுக்............துதிக்கென்றிடும்
நந்திக்கு நாதன் நயத்து உரைந்தானே.

அதிவீரராம பாண்டியன்-கொக்கோகம்

சிவன் (ப.ஆ) ஸ்ரீதேவி புத்தக நிலையம் பூபதி, 1, ஆண்டியப்பன் தெரு சூளை, 2006. ரூ. 75/- அருணா ஆப்செட்.

**பக்கம்-13:** பெருவிரல், புறந்தாள் பரடு, முழந்தாள், அல்குல், நாபி, மார்பு, முலை, கை மூலம், கழுத்து, வாய், மண்டை, கண், நெற்றி, உச்சி-15. இடங்கள்-அமுத நிலை இடங்கள்.

**பக்கம்-37:** நெஞ்சு-தாமரை-காமநினைவு. முலை-மார்பூ- பச்சிலை(பசலை) விழி-அசோகம்-கண் வருத்தம், உச்சி-முல்லை- கிடத்தல். நிதம்பம்-கருங்குவளை-மயக்க நிலையில் இருத்தல்.

**பக்கம்-45:** பாடல் 23. பூரணை, அமாவசை-வீரியம் குறைந்திருக்கும்.

**பக்கம்-66:** பெண்களின் பருவம். வாலை, தருணி, பிரவிடை- மூன்று பருவம். வாலை-16-30, தருணி-30-60 வயது, பிரவிடை-60 வயதுக்கு மேல், விருத்தை-50 வயது.

**பக்கம்-67:** வாலையைச் சேருதல்-ஐப்பசி, கார்த்திகை, ஆனி, ஆடி. தருணி-முன்பனி-மார்கழி, தை. கார், இளவேனில்-சித்திரை, வைகாசி.

**பக்கம்-122:** உத்தாணிதம்-மல்லாந்து அல்லது குறுக்கே படுத்தல்.

**பக்கம்-259:** பருவ லட்சணம், அமுதநிலை, பேதை-7வயது- உச்சி. பெதம்பை-19 வயது-நெற்றி. மங்கை-12 வயது-உதடு. மடந்தை-14 வயது-பிடரி. அரிவை-18 வயது-கன்னம். தெரிவை-20 வயது-குய்யம். பேரிளம் பெண்-32 வயது-அல்குல்.

**பக்கம்-264:** கலவி நூல் 16 வயது பெண், 20 வயது ஆண்.

## இன்பரச மாலை - அரும்பொருள் அகராதி, விளக்கம்

| வ. எண் | பாடல் எண் | பொருள் |
|---|---|---|
| 1 | 3 | *பாகம் - பக்கம்* |
| | | *மடம் - முனிவர் வாழுமிடம்*<br>*புறம் - பக்கம்* |
| 2. | 5 | *மங்கை - 12-13 ஆண்டுகள் உள்ள பருவம்* |
| 3. | 6 | *போது - பொழுது,* |
| | | *பேய் - மூளை கெடுதல்*<br>*(அறிவு மாற்றமடைதல்)* |
| | | *சந்தி - இரவும், பகலும் இல்லாக் காலம்* |
| 4. | 8 | *கன்னி - ஆடவருடன் இன்பம் நுகராதவள்* |
| | | *வாரணம்-வினாயகர். இங்கு கூறப்பட்ட வெள்ளை வினாயகரின் ஆலயம் திருவலஞ்சுழி - சுவாமிமலை அருகில் உள்ளது.* |
| 5. | 9 | *முயலகண்டன்-வலிப்புநோயுள் ஒன்று* |
| 6. | 10 | *ஒள்ளிய - அழகிய, வள்-கூர்மையுள்ள, தெள்ளிய-அறிவுடைய, பகல்- முகூர்த்தம்-நல்லவேளை, வெள்ளி-சுக்கிரன், முடுகுதல்-விரைதல்* |
| 7. | 11 | *வழும்பு-குற்றம்; துயில்-தங்குதல் தாங்கல்-தாங்குகை; நடத்தல்-ஒழுக்கம், முறை. உரு - அச்சம்* |
| | 12 | *நெறி-விதி; அறவு-அறுதி; ஓடும்-ஓடல்; குலையும்.* |
| 8. | 13 | *விந்து-சுக்கிலம், துளி.* |

| வ. எண் | பாடல் எண் | பொருள் |
|---|---|---|
| *9.* | *14* | அளைதல் - தழுவுதல் |
| *10* | *15* | பாங்கு - நன்மை<br>புல்கி - தழுவி<br>நீதி - மெய்முறை. |
| *11* | *16* | நேமம் - முறை<br>நிரை - வரிசை<br>சாமம் - 3 மணி<br>சேமம் - நல்வாழ்வு<br>தோகை - பெண். |
| *12* | *17* | ஆர் - நிறைவு<br>ஓர்தல் - உணர்தல்<br>ஓவியம் - அழகு<br>தூங்குதல் - பொறுத்துக் கொள்ளுதல் |
| *13.* | *18* | பாரம் - ஓர்நிறை<br>பொதுவன் - சூரியன்<br>பழுது - உடல், சிதைவு<br>கூன் - வளைவு<br>பாவி - தீமையாளன்<br>அறிவு - உணர்வு<br>அகண்ட - முழுமை; பிரிக்கப்படாத |
| *14.* | *19* | மடந்தை - 14 முதல் 19 வரையில் உள்ள பெண்<br>புல்குதல் - தழுவுதல்<br>மெல்லி - பெண் (மெல்லியர்)<br>நல்குகுதல் - வளர்த்தல்<br>தெளிவு - ஆய்ந்து காணுதல் |
| *15.* | *20* | போதகம் - அறிவுரை<br>வசம் - சொல் |

| வ. எண் | பாடல் எண் | பொருள் |
|---|---|---|
| | | மறுத்தல் - தவறு |
